# திராவிடநாடு

30—8—59 | வார வெளியீடு | விலை 16 காசு


## விளைவு என்ன?

—[சா. சதாசிவம்]—

மறைமலையார் மணித்தமிழைப் பழிப்ப தற்கோ
'மகா' நாடு கூட்டினார்கள் மண்ட பத்தில்?
குறையென்ன கண்டார்கள் நடையில்? வெட்டிக்
கூச்சலிடக் கருதுவதோ கருத்த ரங்கம்?
முறையாகத் தமிழறிந்தோர் கூற மாட்டார்
முத்தமிழின் சிறப்பறியாச் சிறுமைக் கூற்று!
கறைபடிந்த உள்ளத்தின் ஓலம் அஃது!
கற்கண்டின் சுவையுணரா நாவே அஃது!

தெள்ளுதமிழ் இலங்குகின்ற நடையில் குற்றம்
தெரிகிறதாம் இதுகளுக்கு! எண்ணும் போது
உள்ளமெலாம் கொதிக்குதடா! திண்ணைப் பேச்சு
அத்திம்பேர் அம்மாமி, நமஸ்கா ரந்தான்
அள்ளுகின்ற உரைநடையோ? அடுப்பில் போடு!
அவியல்போல் ஆஹா! பேஷ்! என்று சொன்னால்
கொள்ளாது தமிழ்நெஞ்சம்! கொதித்துச் சீறும்!
எள்ளாதீர் எந்தமிழை! புதைந்து போவீர்!

எருமையல்ல எதையும் நாம் பொறுத்துக் கொள்ள

எரிமலையாய் வெடித்துவிட்டால் கருகிப் போவீர்!
அருந்தமிழைப் பழித்தவரைப் புகழ்வ தற்கு
அறிவற்ற குருடரல்ல இருக்குந் தோழர்!
தெரியாத தெளியாத முடிவு கட்டித்
தேசிகனே பேசிவிட்டீர்! ஏசி விட்டீர்!
புரியவில்லை என்றுரைத்தால் புலவர் உண்டு!
புலியைப்போய் எழுப்பிவிட்டால் விளைவு என்ன?

# எழுஞாயிற்றின் முன்னே இருட்கற்றைகள்!

—[பா. கரிகாலன்]—

"வடக்கு வளர்கிறது; தெற்குத் தேய்கிறது"-என்று நாம் சொல்ல ஆரம்பித்தவுடனே — அதுவும் சந்துமுனைகளிலே சிந்துபாடித்திரியும் மந்தபுத்திக்காரர்களைப் போன்றோ, ஏனோ தானோக்களைப் போன்றோ, உள்ளத்திலே நச்சு எண்ணங்களை மிச்சமாக்கி உதட்டிலே புன்னகையை வெளிக்காட்டி உழலுகின்ற இழிகுணங்கொண்டவர்களைப் போன்றோ — வடக்கின் மேல் கொண்ட வற்றாத பொருமையை வார்த்தைகளால் வடித்தெடுத்து மக்கள் முன்னிலையில் வைத்திட வேண்டுமென்ற நப்பாசை நெஞ்சைத் தழுவிட மேலே கூறிய கூற்றைக் கூறுகின்றோமா? இல்லை; இல்லை; புள்ளிவிவரங்கள் —டெல்லி பீடத்தின் வரைமுறையற்ற—வகையற்ற, நெறியற்ற—நேர்மையற்ற, சுருங்கச் சொல்லின் வடக்கு வாழ்வதற்கும், தெற்குத் தாழ்வதற்குமான வழிகளைச் செய்துகொண்டு 'ஏகபாரதம்தான் எங்கள் குறிக்கோள்'' என்று மார்தட்டிப்பறைசாற்றுபவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள வேறுபாட்டினைப் பாருக்குப் பகருகின்ற ஒலிபெருக்கிதான் இந்தப் புள்ளி விவரங்கள் — அந்த ஒலி பெருக்கியின் உதவியைக் கொண்டுதான் நாம் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் 'ஏகபாரதம் விரும்பி'களின் ஏற்றமிக்க நல்லாட்சியை எடுத்துரைக்கின்றோம்; பிரிவினை வைரிகளின் பீடும்—பெருமையும், ஒப்பும் — உயர்வுமற்ற ஆட்சியின் திறத்தைத் தெளிவுபடுத்துகின்றோம்; அப்படித் தெளிவு பெற்ற பின்னே;—

அதற்குச் சரியான பதிலுரைக்க இயலாத நிலையிலே; — அரசியலுக்கே அருமையான இலக்கணம் வகுத்தவர்கள்— அதன்படியே நடப்பவர்கள்—அதனால் உலகெங்கும் "இத்தரைபோலொரு மாநிலத்தை இனி எத்தரையில் காண்போம்? இனிமேல் பாரதம்தான் அனைத்துலக ஆட்சிக்கும் சாரதியாய், வழிகாட்டியாய் விளங்கும்'' என்று புகழப்படுபவர்கள்—என்றெல்லாம் தங்களைத் தாங்களே விளம்பரம் செய்துகொள்ளும் 'அகில இந்தியக் கண்ணோட்டக் காரர்கள்' நம்மை இழித்தும், பழித்தும், இல்லாதனவற்றையும்,பொல்லாதனவற்றையும், கூட்டியும் குறைத்தும், எங்கும், எப்போதும், என்றும் எவரிடமும் கூறிவருகின்றனர். ஆனால் அதற்கு நாங்கள் கூறுகின்ற ஒரே பதில் என்ன தெரியுமா? குயிலின் கீதத்தில் குறைகாணும் கோட்டானையும், மயிலின் ஒயில் நடனத்தில் மாசு காணும் மந்தியையும், எழுஞாயிற்றின் ஒளியினை ஏளனம் செய்யப் புகுந்த இருட்கற்றைகளையும்தான் நினைவூட்டும் என்று கூற விரும்புகின்றோம்.

அதே நேரத்தில் கழகத்தின் கருத்துக்கள் மாற்றாரின் மனத்தையும் ஊடுருவிச் சென்றுவிட்டன; கேளாக் காதுகளும் கேட்கத் தொடங்கியுள்ளன; நமது குரலைப் பழிப்பவர்களும் எதிர் துருவங்கள் என்ற நிலைமாறி நேர் துருவங்களாகியுள்ளனர், என்பதைத் தெளிவுபடுத்துகின்ற சான்று ஒன்று அண்மையில் நமக்குக் கிடைத்துள்ளது.

"சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுவதற்குள்ள முக்கியமான காரணம் திட்டங்கள் அகில இந்திய அடிப்படையில் நிறைவேற்றப்படவேண்டுமென்ற கண்டிப்புத்தான்''— இக்கூற்றைக் கூறியவர் வடவர் ஆட்சியை வெறுக்கும் நம்மில் ஒருவரல்ல...

பின் யார்?

'ஏகபாரதம் விரும்பிகளின்' படையினிலே எக்காள நடைபோடும் அமைச்சர் பக்தவத்சலம் தான் சென்ற ஜூலை 23-ல் சென்னையில் நடைபெற்ற திட்ட அமுல் குழுத்தலைவர்கள் மற்றும் தென் மாநில சமூக நல போர்ட் தலைவர்கள் ஆகியோர்களின் மாநாட்டின் இறுதி நாளன்றுதான் இந்த எழில்மிகு கருத்தை எடுத்துரைத்தார்.

"வடக்கின் வளர்ச்சியில் டில்லி பீடம் காட்டிடும் அதிக அக்கறையின் காரணமாகவே தெற்கின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது,''— என்று நாம் எடுத்துரைக்கும்போது "இல்லை, இல்லை'' என்று ஏளனத்தைக் குரலில் கலந்து அள்ளி வீசுபவர்கள், "பொய், பொய்'' என்று புன்மையுரைகளைப் பொறுக்கி எறிபவர்கள், இன்று அதே வாயால் நாம் கூறும் கருத்திற்குப் பக்கமேளம்தட்டக் கிளம்பியிருப்பது உண்மையிலேயே வியப்பையும், அதே நேரத்தில் அவர்களது அறியாமைப் போக்கைக் கண்டு வேதனையையும் ஒருங்கே அடைந்திட நேரிடுகின்றது.

"சமுக நல வளர்ச்சிக்காக ஒரு பேராசையான திட்டத்தை நிறைவேற்றுகையில் தாமதங்களை நிச்சயம் தவிர்க்கவேண்டும்; தவிர்க்கவும் முடியும்; ஆனால் திட்டங்களை வகுப்பதில் அகில இந்திய அடிப்படை பற்றிய அளவு மீறிய கண்டிப்பும், கட்டுப்பாடும் இருக்கிறது. இது கூடாது;''—அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் டில்லி பீடத்திற்கே கண்டிப்புக் கலந்த குரலில் உத்தரவிட ஆரம்பித்துவிட்டார். ஏன் இந்த அவலநிலை?

"வேண்டுமானால் மத்திய சர்க்கார் திட்டங்களுக்கான ஒரு விரிவான அடிப்படையை நிர்ணயிக்கட்டும்; ஆனால் நோக்கங்களுக்கு ஒப்பத் திட்டங்களை மாற்றி அமைத்துக்கொள்ள மாநில அரசுகளுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும்''—அமைச்சர் மத்திய அரசைத் தட்டிக்கொடுத்துப் புத்தியும் கூறத் தொடங்கிவிட்டார். ஏன் இந்த நிலை?

நமது திராவிடம்—தென்னகம் மாற்றாரைத் தட்டிக் கொடுத்தே தன் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளும் கேவல நிலையிலா இருந்திருக்கிறது? இல்லையே;

இத்திராவிடத்தில் நாட்டின் வளம் பெருக்கும் புதைபொருட் செல்வங்களுக்கென்ன பஞ்சமாகவா போய்விட்டது? மிகுதியும் உண்டே! தமிழ்நாட்டிலுள்ள சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் இரும்பும், நிலக்கரியும் கிடைக்கின்றன; ஆந்திரத்தில்

(16-ம் பக்கம் பார்க்க)

# எதிர்கால ஏறுகளே வருக!

ர் 18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (30–8–59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 7

**ஏ! அப்பா! இத்தனை பட்டதாரிகளா?**

**வரிசையைப்பார்! பி. ஏ, எம். ஏ, பி. டி, பி. எல். என்று!!**

**ஆச்சரியமாயிருக்கிறதப்பா! அமைச்சர்கள் அஞ்சுவதில் அர்த்தமில்லாமலில்லை!!**

*

சென்றகிழமை சென்னைமா நகரிலே நடைபெற்ற திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தினரின் மாநாட்டையொட்டி, நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், கண்களை மட்டுமின்றிப் போவோர் வருவோர் கவனத்தையும் கருத்தையும் கவர்ந்தன. அம்மாநாட்டில் கலந்துகொண்டோர், சிற்றுடைகட்டி, குறுந்தடையாயிலும் பாப்பாக்கள் அல்ல! விரைவில் வாழ்க்கைப் படிக்கட்டுகளில், ஏறவேண்டிய பருவத்தினர்!! கல்லூரிக் காளையர்! கவலையின் ரேகைகள் படிந்திட முடியாதவயதினர்!! கூடித்திகழ்ந்த அவர்களைக் கண்டபோது, ஒளிதவழும் முகமும், உற்சாகம் புரளும் கண்களும், வாடாப்பருவமும், அசையா மனமும்கொண்டு விளங்கிடும் அந்தப் பருவமில்லையே நமக்கு என்று வயோதிகர் வாடிடவேண்டும்! வம்பும் தும்பும் பேசுகிறோம், வாயாட முனைகிறோம். எதிர்காலத்துக்கு, இப்படியிப்படி உலகமிருக்கவேண்டுமென நாமே உலகத்தைச் சீர்திருத்தம் செய்துவைக்கப்பிறந்தவர்களெனப் பேசுகிறோம். ஆனால் வளருகிறது எதிர்காலம் என்பதை இதோ, எடுத்துக்காட்டி இவர்களன்றோ, இடுகின்றனர் முழக்கமென, எண்ணியொடுங்க வேண்டும்!! அந்தளவுக்கு சரித ஆறு ஓடிற்று, பொருளாதாரம் அலசப்பட்டது, புண்பட்டுப்போன சமுகங்களின் வரலாறுகள் பேசப்பட்டன, தாழ்ந்து வீழ்ந்த நாடுகளின் வகையும், அவை அங்ஙனம் ஆனதற்கான காரணமும் விளக்கப்பட்டன, தமிழ் கொஞ்சிற்று, தமிழ்மாவீரம் ஒவ்வொருவர் பேச்சிலும் மிஞ்சிற்று; பூத்திடும் புத்துலகு எப்படியிருக்கும் என்பதனை, பழைமைக்குக் கட்சி அமைக்கும் ஆச்சாரியார்களும், புதுமையெனும் பெயரால் பொல்லாங்குக்கு வழியமைக்கும் பெரியவர்களும், மூச்சுவிட்டால் போச்சு முளைவிடும் முன்னேற்றம் என்று நினைக்கும் அப்பாவிகளும், கண்டிருக்கவேண்டுமானால் வந்திருக்கவேண்டும் கடந்தகிழமை, சென்னை மெமோரியல் மண்டபத்துக்கு.

அவர்கள் அரசியல்வாதிகளல்ல! எனவே, அரசியல் அமளிகளை எப்படி நடத்தலாம், என்னென்ன ஏற்பாடு செய்யலாம் என்பதைப்பற்றி விவாதிக்கவில்லை!! அரசியல் இலாத பொய்யுலகில் அவர்கள் வசிப்பவர்களுமல்லவே? அதனால் அரசியலை அறவே தமது கவனத்தைவிட்டு, அகற்றிடவா முடியும்? நடுநடுவே, அந்த வாடை வீசிற்று! என்றாலும், அவர்களது அன்புக்குப்பாத்திரமான திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட நாட்களாகச் சொல்லிவரும், "அரசியலில் மாணவர்கள் நேரடி பங்கு கொள்ளுதல் ஆகாது" எனும் அறிவுரையை, முழுமனதோடு, ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவித்தது மாநாடு. அமைச்சர் சுப்பிரமணியம் கண்டிருந்தால் "ஐயகோ! மாணவர்கள், அரசியலில் பங்குகொள்ளுதல் ஆகாது என்றோம். அதுபோல் நடக்கவும் செய்கிறார்கள். நமது கட்சியால் அதுபோல் முடியவில்லையே!" என்று நிச்சயம் அங்கலாய்த்திருப்பார். உளமாரக் காங்கிரஸ், மாணவ உலகுக்கும் நேரடி அரசியலுக்குமிடையில் தொடர்பு ஏற்படாமல் துண்டிக்கவேண்டுமென விரும்பியிருந்தால், செய்திருக்க முடியும். இம்மாநிலத்தில் மட்டுமல்ல, அவர்கள் வசம் அகப்பட்டு விழிக்கும் இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லாப் பகுதியிலும், இந்த நன்னெறியை வளர்க்கமுடியும். ஆனால், அவர்கள் விரும்புவது, அதுவல்ல! மாணவர்கள் 'காங்கிரஸ் அரசியலில்' கலந்துகொள்வதானால் தவறில்லை; கழகம் போன்ற அமைப்புகளில் ஈடுபடுவதுதான் பஞ்சமாபாதகம் என்பதுதான். அப்படியொரு தடை ஏற்படின், தழைக்கும் கருத்துக்கள், பிழைக்கமுடியாமற் போகும்! கொழிக்கும் நமது ஆதிக்கம் தங்குதடையின்றி நீடிக்கும்! அப்பப்ப, இந்த மாணவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துந்துபிகளாகவன்றோ விளங்குகின்றனர்! இதற்கொரு முற்றுப்புள்ளி வைத்தல்வேண்டும்!! — எனும் கெடுமதிகொண்டே, நல்லதுக்கு ஒப்புதல் தந்தோர் போல் நடித்தனர். நாம் ஏற்றோம்! இதுநாள் வரை, கழகத்தின் ஒரு கிளையென விளங்கிய மாணவர் கழகத்

தையும் பிரித்துத் தனியாக்க விரும்புகிறோம்! விருப்பத்தை, மாணவர்களும் மதித்து, "நேரடி அரசியல் படிக்கும் காலம் வரையில் கூடாது" என்று, இதோ முடிவெடுத்து, முரசொலியும் இளப்பிவிட்டனர்!!

அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்று கூறிவிட்டு, அதே சமயத்தில், திராவிட மாணவர் எனும் பெயரில் மாநாடு கூட்டலாமா எனக் கேட்கக் கூடும். திராவிட மாணவ முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் நடவடிக்கைகளில் நேரடி பங்கு கொள்ளாது. படிக்கும் நேரத்தையும், பரிட்சை சமயத்தையும், விட்டுவிட்டு வேகமான ஆர்வத்துக்கு இரையாகிக், கற்கவேண்டியதையெல்லாம், இழக்கத் துணியாது. அதற்காகக் கண்களை மூடிக்கொண்டு, எட்டும் எட்டும் பதினாறு என்று கூட்டிவிட்டால் போதும், இங்கிலாந்து நாட்டில் ஆண்ட மன்னர்களின் பெயர் வரிசையை மனப்பாடம் பண்ணிவிட்டால் போதும், நியூடன் விதியை நெட்டுருப் பண்ணுவதோடு முடிந்தது வேலை என்றும் இருக்காது. இப்படி, எந்த மாணவரும் இருத்தலுமாகாது. ஏட்டுப் படிப்பு, நாட்டுக்காகவும், நாளைய வாழ்க்கையைச் செப்பனிடுவதற்கும்தானே ஒழிய, ஏட்டுக்காக அல்ல. இன்றைய மாணவர்கள், நாளைய நாட்டினர்! அவர்கள் வாழப்போகும் நாட்டின் அலைமோதும் நானாவிதமான கருத்துக்களைப்பற்றி, அறிவதில் தவறில்லை; கலந்துகூடி அலசுவதில் குற்றமில்லை; கூடி உட்கார்ந்து விவாதிப்பதில், விளைவுகள் மோசமாகிவிடாது. இவை யாவும், கலைபயில் எவருக்கும், இருக்கவே வேண்டும். ஆனால், இதுவே முழுநேர வேலையெனக் கருதி, கற்கவேண்டியவைகளைக் காற்றிலேவிட்டு, பருவத்தைப் பாழடித்துக் கொள்வதை நாம் விரும்பவில்லை. இரண்டு காரணமுண்டு, இதற்கு. ஒன்று, எத்தனையோ பாடுபட்டு இவர்களையெல்லாம் படிக்க வைக்கும் பெற்றோரின் ஆவல், பாழாவது. இரண்டாவது; விரும்பும் எதிர்காலத்தை, இன்பத் திருவகத்தை உருவாக்க, ஏராளமான விஞ்ஞானிகளையும் என்சினியர்களையும், டாக்டர்களையும், புலவர்களையும், அறிஞர்களையும் நாம் ஒவ்வொரு கல்லூரியிலும் காணவிரும்புகிறோம். எந்தக் கல்லூரியிலிருந்தாவது, இவர் முதல் வகுப்பில் தேறியவர் யார் இவர்? தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழக அரசியல் கொள்கைகளை அறிந்தவர், என்கிற சேதியைவிட இன்பமான சேதி நமக்கு எதுவுமில்லை! சென்னைமாநகரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில், பி. ஏ-க்கள் எம். ஏ-க்கள் பி. எல்-கள் என்கிற பட்டியலைப் பார்த்தபோது, நாம் இன்பம் அடையக் காரணமே அதுதான்!!

அதெப்படிய்யா சாத்தியம்? அரசியலை அறியவேண்டுமென்கிறாய்; ஆனால், நேரடி நடவடிக்கையில் பங்குகொள்ளக் கூடாதென்கிறாய். சாப்பாட்டைக் காட்டிச் சாப்பிடலாம் என்பதைவிட திருட்டுத்தனமாகச் சாப்பிடு என்று சொல்வதுபோலல்லவா உள்ளது உன்கூற்று?—என்று சிலர் வினவக்கூடும். பிறர் நாம், திருட்டுத்தனமாக அல்ல, எல்லோருக்கும் தெரியும்படியாகவே சாப்பிடலாம் என்கிறோம்! சுவையறிந்து, நன்கு ரசித்தே சாப்பிடலாம்; தவறில்லை!! ஆனால், சாப்பிடுவதோடு கூட நாமும் சமைத்தும் பார்ப்போமே என்று ஆரம்பித்துவிடக்கூடாது; அதற்கேற்ற பருவம் இதுவல்ல என்றே நாம் சொல்கிறோம். சமைப்பதுவேறு! சாப்பிடுவதுவேறு!!—என்பதை, வெள்ளையன் ஏற்படுத்தித் தந்துவிட்டுப்போன அதே நிர்வாக இயந்திரத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும், வீராதிவீரர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய கோவைத் தோழர் **ஆறுமுகமும்**, துவக்கிவைத்த அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தோழர் **சோமசுந்தரமும்**, அனைவரையும் வரவேற்ற சென்னைத் தோழர் **பொன்னுவேலும்** தத்தமது உரையில், தெளிவாகச் சொல்லியிருக்கின்றனர், நேரடி நடவடிக்கையில் மாணவர்கள் ஈடுபடலாகாது என்று. அதோடு, அப்படிக் கேரளத்தில் மாணவர்களை ஈடுபடுத்திய அரசியல் தலைவர்களின் போக்கையும் கண்டித்து அறிவுரை தந்திருக்கின்றனர்! இத்தீர்மானம் செப்பும், திராவிடமாணவ உலகம், எத்துறையில் சென்றிடினும் திறனையும் பகுத்தறியும் பண்பையும் எடுத்துச்சொல்லும் என்பதை!!

சரியய்யா. ஏன், இவர்கள், தனியாகத் திராவிட மாணவர் எனச்சொல்லிக்கொள்ளவேண்டும்? — என்றொரு குரல் கேட்பதும், நமது காதுகளில் எட்டாமலில்லை. இதுவே, அரசியலுக்கு வித்திடுவதுதானே என்று வினவக்கூடும். கல்லூரிகளைச் சிறையெனக் கருதுவோர்தான் அப்படிக்கேட்கக்கூடும். சிறைச்சாலைகளைப்போலவே, கலை பயில் கழகங்களை ஆக்கினால்கூட, அவர்களைப் பிடித்து அடைத்துப் பூட்டி வைத்திருக்க முடியுமே தவிர, அவர்தம் இருதயங்களுக்குப் பூட்டுப்போட யாரால் முடியும்? வளரும் கருத்துக்கள்பால், அவர்தம் கவனம் செல்லுவதை யாரால் தடுக்கமுடியும்? மாணவருக்கு வருங்கால அரசியல் வாழ்வைப்பற்றிய அக்கறையிருக்கவேண்டுமென்பதால்தான், கல்லூரிகளிலேயேகூடப் பற்பல அமைப்புகளுக்குத் தேர்தலும், அதன்மூலம் ஓட்டுப்போடுதல் எங்ஙனம் எனும் பழக்கமும் கற்றுத்தரப்படுகிறது. அதேபோல, தங்களைச் சுற்றி வளரும் கொள்கைகளை அவர்கள் அறிவதையும் அறிந்தவைகள்மீது ஆசைகொள்வதையும், அந்த ஆசைகளை அவர்கள் அலசுவதையும், யாராலும் கட்டுப்படுத்த முடியாது! அந்த ஆசை, அளவுக்குமீறி, படிப்பையே பாழாக்குமளவுக்குச் செல்லாது கட்டுப்படுத்தும் வேலையைத்தான் அரசியல்வாதிகள் என்போர் செய்யவேண்டும்!!

(15-ம் பக்கம் பார்க்க)

# கதையொன்று சொல்லி!

"அரசிளங் குமரிக்கும் எனக்கும் திருமணம் பாதி முடிந்துவிட்டது! —என்றொருவன் பகர, அது எப்படியப்பா பாதி முடிந்தது என்கிறாய் என்று கேட்க, அவளைத் திருமணம் செய்துகொள்ள நான் முடிவு செய்துவிட்டேன், ஆனால் அவளுடைய சம்மதம் கிடைத்தால் மிச்சப்பாதி முடிந்துவிடும் என்று கூறியதுபோல, திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் இன்பத் திராவிடம் வரும்! என்று கூறிவருகின்றனர், ஆனால் அவர்கள் சொல்லும் ஆந்திரமும் கேரளமும் கர்நாடகமும் இன்னும் சம்மதித்ததாகத் தெரியவில்லை" என்று அமைச்சர் வெங்கட்டராமன், அழகுபடப் பேசியிருக்கிறார்! சம்மதம் கேட்டு, அந்த மனோகரி மறுத்துவிட்டாள் என்றால், அமைச்சர் கூறுவதில் பொருளுண்டு. கழகம் இப்போதுதான், சம்மதம் பெறும்பணியினை அந்தந்த வட்டாரங்களுக்குள்ளே, செய்துவருகிறது. அந்த வட்டாரங்களையெல்லாம் அரசிளங் குமரிக்கு ஒப்பிட்ட அமைச்சர் கழகத்தை ஆண்டியின் நிலையில் வைத்துப் பேசியுள்ளார்! அவைகள், அரசிளங் குமரிகளுமல்ல, ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும் இடங்களுமல்ல. அமெரிக்காவைப் போல, அவையாவும் சுகவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தால், அதனுடைய தொடர்பு எப்படிப் பக்கிரிக்கு ஏற்படமுடியும் என்று கேட்பதில் நியாயமிருக்கலாம். ஆந்திர முதலமைச்சரும், கர்நாடகத்தினரும், கேரளமும், தங்களது ஆண்டிக் கோலத்தைஅடிக்கடி சொல்லிவருகின்றனர். அப்படியே அவைகளை அரசிளங்குமரிகளின் இடத்தில் வைத்துக்கொண்டாலும், ஆண்டிகளுக்கும் அரசிகளுக்கும் தொடர்பு ஏற்படக் கூடாதகாலமுமல்ல இது! ஆனாலும் அமைச்சர் நம்மைக் கேவலமாகப்பேச, இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். புதுக்கதையா எனின், அதுதான் இல்லை! இது வெள்ளையன் சொல்லி இந்த வீரர்கள் கேட்ட கதை!! இந்திய உபகண்டத்துக்குச் சுதந்திரம் வேண்டுமென இவர்கள் கேட்டுப் போராடிய போது, இந்தக் கதையைத்தான் பிரபுக்கள் சொல்லினார்.

காங்கிரஸ்காரர்கள் கனவுகண்டுவிட்டால் போதுமா? சம்மதம் தர வேண்டியவன், இலண்டனிலன்றோ இருக்கிறான் என்றனர். கனவு பலிக்காமல் போகவில்லை! அரசியல் வரலாற்றில் ஆண்டிகள் கண்ட கனவானாலும் அரசிகள் கண்ட கனவானாலும், கனவில் உண்மையும் உறுதியுமிருக்குமானால் நிச்சயம் பலிக்கும்.

அகில உலகமும் மெச்ச வாழ்ந்த எகிப்து நாட்டு மன்னன் பரூக்கைச் சாய்க்கக் கனவு கண்டவர்கள் ஆண்டிகள்தான்! இப்போது அந்த ஆண்டிகள் பரூக் அமர்ந்திருந்த ஆசனத்திலே அமர்ந்திருக்கின்றனர். அரசனாயிருந்த பரூக்கோ ஆண்டியாகிப், பாரிசிலும் பக்கமுள்ள நாடுகளிலும் பரதேசியாக அலைந்துகொண்டிருக்கிறான்!

கொக்கரித்த ஜார் மன்னனை வீழ்த்தியவர்கள் ஆண்டிகள்தான்.

கொடுமைமிக்க பிரெஞ்சு லூயியை அரியாசனத்திலிருந்து அகற்றியதும் ஆண்டிகள்தான்.

அமைச்சர், இப்போது 'கனம்' ஆனதால், ஆண்டிகள் கேவலமாகப்படுகிறார்கள்! அவரது குரு, காமராசர் பிச்சைக்காரர்கள் என்கிறார் நம்மை. அதே பாதையில் நடந்திடும் ஆசையுள்ள வெங்கட்டராமன் ஆண்டிகள் என்கிறார் நம்மை. காமராசர் கதைசொல்லவில்லை — தெரியாததால்! இவர் தெரிந்தவர்போல் கதை சொல்லி நம்மை ஆண்டிகள் என்கிறார்!!

இந்த ஆண்டிகள் இந்தப் பத்தாண்டுக் காலத்திலே, என்னென்ன சாதித்துள்ளார்கள் என்பதை உலகமே கூர்ந்து கவனிக்கிறது. இந்த ஆண்டிகள் தங்கள் சக்திக்கேற்றபடி, எத்தனையெத்தனை கல்விச்சாலைகளுக்கு உதவியும் ஊக்கமும் அளித்தார்கள் என்பதனை நாடு அறியாமலில்லை. இன்னும் சொல்லவேண்டுமானால், இந்த ஆண்டிகள் ஒருநாள் அரியாசனம் ஏறிவிடுவார்களோ என்கிற அச்சம் துளைக்காத காங்கிரசார் இன்றுகிடையாது. ஆண்டிதானே என்கிற அலட்சியம் இருந்தால், முதலில் அமைச்சர்களை, முகாம் போட்டுக்கொண்டு ஒவ்வொரு ஊருக்கும் போய் இப்படியெல்லாம் கதறவேண்டிய அவசியம் ஏற்பட்டுப் போவதில்லை! ஆண்டியின் குரலில் ஏதோ உண்மையிருக்கிறது — எங்கே அந்த உண்மை வென்றுவிடுமோ என்கிற அச்சம் இவர்களையெல்லாம் குடைகிறது—அதனால், பிச்சைக்காரர்கள் என்கிறார் ஒருவர், ஆண்டிகள் என்கிறார் இன்னொருவர், கள்ளச்சாராயம் காய்ச்சிகள் என்கிறார் மற்றொருவர். இப்படியெல்லாம் அலறிக்கொண்டிருக்கின்றனர் தினசரி!!

கதைசொல்லவந்த 'கனம்' வெங்கட்டராமன் கேட்டிருக்கிறார், "இன்பத் திராவிடம் என்கிறார்களே! இதில் கேரளமும், கர்நாடகமும், ஆந்திரமும் இருக்கும் என்கிறார்களே. இந்த நான்கு பகுதியும் சேர்ந்து வாழமுடியுமா? ஒவ்வொன்றும் தனித்தனி பண்பாடும் பழக்கவழக்கங்களும் நடைமுறைகளும் கொண்டவை. இவை எப்படிச் சேரமுடியும்? இவ்வளவு வேறுபட்ட இந்த நான்கும் ஒன்று

சேரும்போது ஏன் வேறுபட்ட மொழியும் பழக்கவழக்கங்களும் கொண்ட இந்தியாவிலுள்ள பதினன்கு மாகாணங்களும் ஒன்ருகச் சேர்ந்து வாழக்கூடாது?'' என்கிருர். கன்னடமும் களிதெலுங்கும் மலையாளமும் உன்னுதிரத்துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும் என்கிருர் பேராசிரியர் சுந்தரனர்! இந்தப் பேருண்மையை, நேருமுதல் யாவரும் ஒப்புகிருர்கள்! நித்தில மணிபோல், நீலக்கடல் முப்பக்கமும் தாலாட்ட விளங்கும் இந்தத் திரு இடம் ஒரு தாயின் சேய்கள் உலவும் கூடம் என்பதனை மறுப்பாரில்லை! இந்தப் பகுதிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளைக் கண்டதால்தான், இவையனைத்தையும் சேர்த்து "தெற்கு'' என்று காங்கிரசாரே அழைக்கின்றனர். இந்த முப்பகுதிகளிலும் உள்ள ஒற்றுமைக் குறிகளை எஞ்சிய இந்தியா வெங்கும் காணமுடியாது.

ஆந்திரத்தைத் தாண்டிப், பம்பாய்க்குள் நுழைந்தால், அடிக்கும் வாடையே வேறு! மத்யமாகாணத்துள்ளும், வங்கம் நோக்கிப் போனல், வரும் மணமே வேறு!! ஆனல், தென்னகத்திலுள்ள பகுதிகளில் எப்பகுதிக்குப் போனலும் ஏற்படுகின்ற 'சகோதர' உணர்ச்சியின் தன்மையே தனிதான். சரிதகாலத்தில் தமிழ் கேரள மண்ணில் தழைத்ததையும் வேங்கிடத்தில் விளையாடியதையும்; கலிங்கம்வரையில நிலவியதையும் வைத்து மட்டுமல்ல; இப்போது ஒருவன் புறப்பட்டு அந்தந்தப் பகுதிகளுக்குப் போனல்அவன் தம்மவரின் இன்னெருவீட்டுக்கு வந்தது போல உணர்வானேயன்றி, அறிமுகமிலாத அந்நியன் வீட்டுக்குள் நுழைந்ததாக எண்ணன். வடக்கே போனல் வடக்கோடு சம்மந்தம் செய்துகொண்டு ஒன்றிவிட்ட ஆச்சாரியார் போன்ருேருக்கன்றி, பிறருக்குப் பிறிதொரு இடமாகவே தோன்றும். குடும்பத் தொடர்பு கொண்ட ஆச்சாரியார் அவர்களே அதற்காக வடக்கை நம்அகம் எனவில்லை! வடக்கு வேறு என்பதை எண்ணிச் சொல்லாமலில்லை —ஆனல் அன்பர் வெங்கட்டராமன் வாதாட வருகிருர்!!

பத்தாண்டுகளுக்கு முன்பென்ருல் அமைச்சருக்கு, ஏராளமான சரிதச் சான்றுகளையும், நமது கலாசாரத்துக்கும் வடக்கேயுள்ள பண்பாட்டுக்குமிடையேயுள்ள வேற்றுமைகளையும், எடுத்துச் சொல்லி நாம் வாதாடவேண்டிய அவசியமிருந்தது. ஆனல், இப்போது நாம் செய்யவேண்டிய வேலைக்கு, யாரரோ முன்வந்து ஆதாரங்கள் தரும் நிகழ்ச்சிகளை அடிக்கடி சந்திக்கிருேம். அந்த வட்டாரத்தால் மகான் எனப் போற்றப்படும் சங்கராச்சாரியரே 'திராவிடா'' என்பதை ஒப்புகிருர் எனின், இதை வலியுறுத்த வேறு சாட்சியமுமா வேண்டும்? கன்னடமும்களிதெலுங்கும் கேரளமும் தமிழகமும் எப்படி ஒற்றுமையுடன் வாழமுடியும் என்று அமைச்சர் வெங்கட்டராமன் அறிவுரைதர முன்வந்த இதே கிழமையில், சில நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. மைசூரின் முன்னள் அமைச்சர் அனுமந்தையா அவர்கள் நமது தோழர்களையும் பொதுச் செயலாளரையும், சென்னைக்கு வந்து கண்டு பேசியிருக்கிருர்! அனுமந்தையா, இன்னும் காங்கிரசிலேயிருப்பவர்— அவர், தேடிப்போய் நேரு போன்றவர்களுடன் பேசிடும் உன்னத நிலையிலிருக்கும் பழம்பெரும் காங்கிரஸ்வாதி—அவர், நம்மைத் தேடிவந்து பேசியிருக்கிருர்! அதே சமயம், நமது மேயர் அரசுக்கு பெங்களூர் மேயர் நாராயணசெட்டியென்பார் விருந்தளித்துபசரித்து, வெகு நேரம் பேசிக்குலவி மகிழ்ந்திருக்கிருர்! துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் இதே கிழமை, பாலக்காடு போய், கழக முழக்கம் செய்தபோது "வடநாட்டு ஆதிக்கம் ஒழியட்டே! திராவிட நாடு அமையட்டே!,'' என்று மலையாளிகள் எழுப்பிய குரலொலியைக் கேட்டு வந்திருக்கிருர். இது மட்டுமல்ல; ஆந்திர அமைச்சரும், கேரளத்தாரும், கன்னட முதல் வரும், நமது காமராசரும் உட்கார்ந்து கூடிப்பேசும்போது ஏற்படும் சுமுகமே தனியழகுதான்! ஆந்திர முதல்வர் சஞ்சீவ ரெட்டி, முன்பொருதடவை, இதனை அழகாகச் சொன்னர், சென்னைக்கு வருவதும் போவதும் எனக்கு, வெளியிடத்துக்குப் போய்வரும் உணர்ச்சியையே உண்டாக்குவதில்லை. ஏனெனில், இங்குள்ள நாம் ஒருவரையொருவர் அறிந்தவர்கள், பழகியவர்கள், நெடுநாள் தொடர்பு கொண்டவர்கள்,'' என்று. சமீபத்தில்கூட நமது காமராசர் ஆந்திரத்தில் போய்த் திறப்புவிழா செய்துவிட்டு வந்திருக்கிருர்! காமராஜர் அங்குள்ளவர்களிடம் ஆங்கிலத்தில் உரையாற்றி, ஆந்திர மக்களை மகிழ்வித்திருப்பார் என்று யாரும் எண்ண முடியாது. தமிழில்தான் பேசியிருப்பார்! நாம் தமிழில் பேசினல், அவர்களால் ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் தெலுங்கிலோ, கன்னடத்திலோ, மலையாளத்திலோ பேசினலும் நம்மால் கூடிய வரையில் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனல், இந்தி! கூடிய வரையிலோ, ஓரளவோகூட அல்ல, நமக்கு என்னமோ ஜெர்மன்-லத்தீன் கேட்பது போலத்தானிருக்கிறது!!

ஏது இந்த நான்குக்கும் ஒற்றுமை? தனித்தனி பழக்க வழக்கங்கள் கொண்ட இப்பகுதிகளைச் சேர்த்துத் திராவிடநாடு கேட்பது எப்படி?— என்று வெங்கட்டராமனர் விவேகவிளக்கம்தர வந்தாரல்லவா? அவருக்கு இதோ ஒருவர், பதிலளித்துள்ளார். நம்மவரல்ல:, பெயர் **டி. எஸ். இராமசாமி அய்யர்**. 'இந்து' இதழிலே, ஒரு கடிதம் தீட்டியுள்ளார். அக்கடிதத்தில், ஏன் சென்னையையும் கேரளத்தையும் ஒன்ருக்கி, ஒரே மாநிலம்ஆக்கிவிடக்கூடாது என்று கேட்டுள்ளார். சாத்யமற்றது மட்டுமல்ல என்பதோடு, தேவையுமற்ற யோசனை இது, என்ருலும், அப்படி ஒன்ருக்கி இரண்டும் இணைய வேண்டிய அளவுக்கு இரண்டுக்கிடையிலும் ஒற்றுமைகள் உண்டு, என்கிருர் அவர்:

**"குஜராத்தியருக்கும், மராட்டியருக்குமிடையிலே இருப்பதைவிடக், கேரளத்துக்கும் சென்னைக்குமிடையிலே எத்தனையோ விதங்களில் பொதுத் தன்மைகள் உண்டு.'**

**"மராத்திக்கும் குஜராத்திய மொழிக்கும் இல்லாத ஒற்றுமை மலையாளத்துக்கும் தமிழுக்கும் இருக்கிறது. மலையாளமும் தமிழும் கிட்டத்தட்ட ஒன்றுபோல உள்ளவையாகும்."**

இராமசாமி 'ஐயர்' இதுபோல எழுதுகிருர்! அமைச்சர் வெங்கட்டராமனே பண்பாட்டில் ஒற்றுமையுண்டா? பழகும் விதத்தில் ஒற்றுமையுண்டா என்று கேட்கிருர்!!

★

# கேரளத்தில் நடப்பதென்ன?

சி. பி. செல்லம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

## புகைச்சல் ஆரம்பம்

ஏற்கனவே இருந்து வந்த கத்தோலிக்கர் கம்யூனிஸ்ட் வெறுப்புப் புகைச்சல், இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதும் அதிகரிக்கத் துவங்கியது. கத்தோலிக்கத் திருச்சபைக்குக்கேரளத்தில், மதஸ்தாபனங்களைத் தவிர, அவர்களது நிர்வாகத்தில் நாலாயிரம் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இருக்கின்றன. இவைகளை மதக் கோட்பாடுகளுக்குப் பயன்படுத்துவதுடன், இதை அவர்கள் ஒரு இலாபகரமான தொழிலாகவும் நடத்திவருகின்றனர். இதில் ஏராளமாக நிர்வாக ஊழல்களும் மலிந்துள்ளன. இவைகளுக்கு அரசாங்க நிதியிலிருந்தும் கிரான்ட் இனத்தில் ஏராளமாகப் பொருளுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இவைகளின் நிர்வாக ஊழலைக் கவனித்துச் சரிசெய்ய எண்ணி, இதில் தலையிட முனைந்த இரு காங்கிரஸ் மந்திரிசபைகளைக் கத்தோலிக்கர்கள் கவிழ்த்திருக்கிறார்கள்.

கத்தோலிக்கர்களைவிடச் சற்றுக் குறைந்த அளவில் நாயர் சமுதாயத்திற்கும் (என். எஸ். எஸ்.) கேரளத்தில் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் உண்டு. இவை சுமார் எழுநூறுக்குள்ளாகவே இருக்கும். இவைகள் பெரும்பாலும் நாயர் சமுதாயத் தலைவரான மன்னத்து பத்மநாபனின் அயராத உழைப்பால் அந்தச் சமுதாயத்திற்குக் கிடைத்தவை. இந்தக் காரணத்தினாலேயே மன்னத்து பத்மநாபனுக்கு அந்தச் சமுதாயத்தினரிடையே மிகுந்த செல்வாக்குப் பெறமுடிந்தது. நாயர் சர்வீஸ் சொசைடியின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

(எஸ். என். டி. பி.) என்ற ஸ்தாபனத்தின்(ஈழவசமுதாய அமைப்பு) நிர்வாகத்திலும் ஒரு சில கல்லூரிகளும் மிகமிகக் குறைந்த அளவு பள்ளிக்கூடங்களும் நடந்து வருகின்றன. இதுபோல் முஸ்லீம்களுக்கும் உண்டு.

இவைகள் ஒவ்வொன்றும் தத்தமது சமுதாயத் தலைவர்களின் முன்னேற்றத்தைக் கருதியும், இரண்டாவதாக இலாபகரத்தை முன்னிட்டும் இந்தப் பள்ளிக்கூட நிர்வாகங்களை நடத்தி வந்தன. ஏற்கனவே கத்தோலிக்கர்களின் ஆதிக்கத்தையும் அவர்களின் எதிர்ப்பையும் ஒடுக்கவேண்டுமென்றஎண்ணத்துடனும், கல்வித் துறையை ஓரளவு சீர்செய்ய வேண்டுமென்றஎண்ணத்துடனும், தனியார் துறையில் நடக்கும் கல்வி ஸ்தாபனங்களின் சீர்கேட்டைச் சரிப்படுத்தவேண்டுமென்ற நினைப்பிலும், முதன்முதலாககம்யூனிஸ்ட் அரசாங்கம் புதுக் கல்விச் சட்டத்தைக் கொண்டுவந்தது. இதற்கு முக்கியமாகத் துணைநின்றவர் கம்யூனிஸ்ட் மந்திரி சபையில் கல்வி மந்திரியாக அமையப்பெற்ற புரொபசர் முண்டஸேரி. இவர் ஓர் கத்தோலிக்கர். கத்தோலிக்கர்களின் நிர்வாகத்திலுள்ள ஒரு கல்லூரியில் புரொபசராக வேலைபார்த்து, அவர்களின் அட்டூழியங்களைக் கண்டு சகியாமல் அவர்களுடன் பகைத்துக்கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தவர். இவர் கல்லூரியில் வேலையிலிருக்கும்போதே முன்னேற்றமான கொள்கைகளையுடையவர்—கம்யூனிஸ அனுதாபி என்று பாதிரிமார்களால் வெறுக்கப்பட்டவர். மதத்தின் வைரி என்று இவருக்குப் பட்டம் சூட்டி இவரைக் கல்லூரியிலிருந்து வெளியேற்றினார்கள். இப்படிப்பட்ட முண்டஸேரி கல்வி மந்திரியாக வந்து புதுக்கல்விச் சட்டத்தையும் கொண்டுவரத் துணையாக இருந்தார்.

இந்தக் கல்விச்சட்டம் முதலாவதாகச் சட்டசபையில் வந்தபோது, கத்தோலிக்கத் திருச்சபை வன்மையாகக் கண்டித்தது. நாடெங்கும் புரட்சி செய்தார்கள் கத்தோலிக்கர்கள். சட்டசபைக் காங்கிரஸ் கட்சி, கட்சியின் பெயரால் இதை எதிர்க்காவிட்டாலும் அதிலுள்ள கத்தோலிக்க உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டனம் தெரிவித்தனர். இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், நாயர் சமுதாயத் தலைவர் மன்னத்து பத்மநாபன் இந்தச் சட்டத்தால் கத்தோலிக்கர் ஆதிக்கம் தொலைந்தது என்று எண்ணி மகிழ்ந்து, முதலாவதாகக் கல்விச் சட்டத்தை ஆதரித்து வரவேற்றார். ஈழவ சமுதாயமும் நமக்குப் பெரும் நஷ்டமில்லையே, நஷ்டமெல்லாம் கத்தோலிக்கர்களுக்கே. கத்தோலிக்கர் ஆதிக்கம் தொலையட்டும் என்று எண்ணி அவர்களும் கல்விச் சட்டத்தை வரவேற்றனர். பொதுவாக நாட்டில் இந்தச் சட்டத்திற்கு ஏழை நடுத்தர வகுப்பினரிடையே நல்ல வரவேற்புக் காணப்பட்டது. கத்தோ

லிக்கர்கள் பதைத்தனர், துடித்தனர். தங்கள் பிடியிலுள்ள காங்கிரஸ் கட்சியின் துணைகொண்டு இச்சட்டத்தை ஒடுக்க முயன்றனர். முடிவில் தோல்வியுற்றனர். என்றாலும் அவர்களது கொதிப்பு அடங்கவில்லை. புகைந்துகொண்டேயிருந்தது.

அடுத்தபடியாக நிலவுடைமைச் சட்டம் சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. இதையும் காங்கிரஸ் கட்சியின் நாகப்பூர் தீர்மானம் குறுக்கே நின்று கட்சி ரீதியாக எதிர்க்கமுடியாமல் செய்தது. இச்சட்டத்தால் பாதிக்கப்படுவோர் கத்தோலிக்கர்களும், நாயர் சமுதாயத்தினருமேயாவர். ஈழவர்களில் பெரும்பாலோர் ஏழைகள் மாத்திரமல்ல, இச்சட்டத்தால் இலாபமடைபவர்களும் அவர்களே. ஆதலால் ஈழவ சமுதாயத்தினர் நிலஉடைமைச் சட்டத்தை வரவேற்றனர். மற்றச் சமுதாயங்கள் மனதிற்குள் இருந்த எதிர்ப்பை வெளியில் காட்டாமல் புகைச்சலுக்குத் தூபம் மூட்டிவந்தன.

இந்த நிலையில்தான் நான் முன்னால் குறிப்பிட்டிருந்ததுபோல் எந்தக் கட்சியும் ஆட்சியை உறுதியுடன் நடத்த ஏதாவதொரு சாதி அடிப்படையிலுள்ளசமுதாயத்தை மறைமுகமாக ஆதரிக்க வேண்டியதாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சி இதற்கு விதிவிலக்காக இருந்தாலும், இயற்கையிலேயே உடல் உழைப்பிலும், சாதி அடிமைத்தளையிலும் அவதியுற்று வந்த ஈழவ சமுதாயத்தினர் கம்யூனிஸ்ட் ஆட்சிக்குப் பின்பலம் கொடுத்து வந்தனர். முக்கிய கம்யூனிஸ்ட்டுதொழிற் சங்கங்களின் கீழிலும் ஈழவ சமுதாயத் தொழிலாளர்களே பெரும்பான்மையாகக் காணப்பட்டனர். கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் புதிய சட்டங்களை ஈழவ சமுதாயத்தினர் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆட்சியும் ஓரளவுக்கு அவர்களுக்குச் சலுகைகாட்டிற்று—தொழிலாளர், தொழிற்சங்கம் என்ற முறைகளில்.

இந்நிலையில் அரசாங்க நிர்வாகத்தைச் செப்பனிடும் எண்ணத்துடன் அதற்குவேண்டிய ஆலோசனைகளைச் சேகரித்து அரசாங்கத்திற்குத்தெரிவிக்க, ரிபாம்ஸ்கமிட்டி என்று ஒரு குழுவை அரசாங்கம் நியமித்தது. அக்குழுவின், பல ஆலோசனைகளுள் ஒன்று, வகுப்புவாரிப் பிரிதிநிதித்துவம் சர்க்கார் சர்வீசில் இனியும் நீடிக்கவைப்பது அவசியமில்லை என்பது. குழுவின் தீர்மானங்களைச் சர்க்கார்பரிசீலிக்கவில்லை. அங்கீகரிக்கவுமில்லை. குழுவின் அபிப்ராயம்தான் இது. இவ்வபிப்ராயத்தை அறிந்ததும், இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் ஈழவர்களும், மற்றும் பின்தங்கிய வகுப்பினர்களும்தான் என்பதை, அச் சமுகத்தினர் உணர்ந்தனர். திவான் அபிபுல்லாவின் காலத்திலிருந்து அனுபவித்து வரும் ஒரு உரிமையை, இழக்கச் சம்மதியோம் என்று குரலெழுப்பத்தயாராயினர். இதன் முன்னோடியாக, ஈழவ-சமுதாயத் தலைவர்களுள் ஒருவரும், சமுதாய மக்களிடையே மிகுந்த செல்வாக்குள்ளவரும், கேரள கௌமுதி என்ற தின இதழின் ஆசிரியரும் (இவ்விதழ் தற்சமயம் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஆதரித்து வருவது) ஆகிய கே. சுகுமாரன் என்பவர் திருவனந்தபுரத்திற்கருகாமையில் குளத்தூர் என்ற கிராமத்தில், ஈழவ சமுதாயதினரைக் கொண்டு ஒரு கூட்டம் கூட்டவைத்து, (நாராயண குரு சமாதி தினக் கூட்டம்) அந்தப் பொதுக் கூட்டத்திற்கு, முதன் மந்திரி இ. எம். சங்கரன் நம்பூதிரிப்பாட் அவர்களைத் தலைமை தாங்க வைத்து, அவரது தலைமையில் கே. சுகுமாரன் மூன்று மணி நேரம் வாசித்த கையெழுத்துச் சொற்பொழிவு, வரலாற்று முக்கியம் வாய்ந்தது. அதில் அவர் ஈழவ சமுதாயத்தினருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும்இன்றுள்ளதொடர்பைச் சுட்டிக்காட்டி, எங்களுக்குக் குறையுண்டாகச் செய்வது உங்களுக்கு அபாயமென்று எடுத்துக்காட்டி எச்சரித்து;ஆகவே ரிபாம்ஸ்கமிட்டியின் தீர்மானத்தை அங்கீகரிக்கக் கூடாதுஎன்றும், அந்தக் குழுவில் பின்தங்கியவகுப்பினர்களின் பிரதிநிதிகள்கூட இருந்திருந்தால்இந்தத் தீர்மானத்தையே பார்த்திருக்கமுடியாதென்றும் சொல்லி; தான் ஆற்றிய சொற்பொழிவின் பிரதி ஒன்றையும் முதன்மந்திரியிடம் கொடுத்தார். முதன் மந்திரியும், தனது மந்திரிசபை, உழைப்பாளர்களுக்கும் பின்தங்கியவர்களுக்கும் சமுதாயத்தில் கீழ் நிலையினர் என்று கருதப்படுபவர்களுக்கும் எதிராக எந்தவிதமான தீர்மானமும் எடுக்காது என்று வாக்குறுதியளித்துச் சென்றார். அன்று முதல் துவங்கியது இன்றைய கிளர்ச்சி.

## மன்னத்து பத்மனுபனின் புதிய போர்க்கோலம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் ஒரு சிறிதளவு பாதிக்கப்பட்டுள்ளநாயர்சமுதாயத்திற்குக், குளத்தூரில் கே. சுகுமாரன் செய்த சொற்பொழிவு, வேதனை தந்தது மட்டுமல்ல, பாலக்காட்டில் ஒரு என். எஸ். எஸ். எஞ்சினியரிங் கல்லூரி கட்ட மன்னத்து பத்மனுபனுக்கு கம்யூனிஸ்ட் அரசாங்கம் அனுமதியளிக்கவும்மறுத்தது. கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் புதிய நிலச் சட்டத்தால், பரம்பரையாகவுள்ள நாயர்கள்ஒழிக்கப்படவும் பாதிக்கப்படவும் கூடுமென்ற அச்சம், இவையெல்லாவற்றுக்கும் மேலாக் நிலவி, இந்த ஆட்சி கீழ்சாதிக்காரர்களாகிய ஈழவர்களுக்கும், மற்றும் பின்தள்ளப்பட்ட சமுதாயத்தினருக்கும் மட்டுமே நன்மை செய்யக்கூடியது என்ற எண்ணம், நாயர்கள் சர்க்கார் சர்வீசில் ஏகபோக உரிமை கொண்டாடி வந்ததைத் தடுத்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொலைதல் வேண்டும் என்ற ஆத்திரம், இவைகள் எல்லாம் கூடி நாயர் சமுதாயத் தலைவரான மன்னத்து பத்மனுபனைக் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிராகப்போர்க்கோலம் பூணச்செய்தது.

நாயர் சமுதாயத்தின் சக்கரவர்த்தி என்று கருதப்படும் இவர், வெகுண்டெழுந்து நாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பிரயாணம் செய்தார். அங்கங்கேயுள்ள என். எஸ். எஸ். சங்கங்கள் இவருக்குப் பெரும் வரவேற்புகள் அளித்தன. வரவேற்புக் கூட்டங்களில் எல்லாம் ஈழவ சமுதாயத்தினரை மட்டரகமான வார்த்தைகளால் தாக்கினார். சாதி வெறியைத் தூண்டிவிட்டார். பரம்பரையாகவே இங்கு நிலவிவந்த சாதிப் பிணக்குகள் இவரின் தூண்டுதலால் அதிகரித்தன. ஈழவ சமுதாயத்தினருக்கு ஒத்துழைக்கும் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் கல்விச் சட்டத்திலுள்ள சில பிரிவுகள் எங்களுக்கு ஒத்துவராதவை, அப்பிரிவுகளையும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தையும் எதிர்க்கிறோம்! என்று கூட்டங்களில் பேசினார். கல்விச் சட்டத்தைப் படித்துப் பார்க்காமல் முதலாவதாக ஆதரித்தேன். இப்பொழுது அதை எதிர்க்கிறேன் என்றார். ஏற்கனவே கல்விச் சட்டத்தை எதிர்த்துத் தோல்வியுற்ற கத்தோலிக்கத் திருச்சபையும்,

இதுவே தக்க தருணமென்று இவரைப் பின் தாங்கிப் போராட்டத்தில் குதிக்கத் தயாரானது. கத்தோலிக்கர்களின் கைப்பாவையான கேரள காங்கிரஸ் இந்த நிலைமையில் கத்தோலிக்கர்களுக்காகக் கல்விச் சட்டத்தை எதிர்த்துப் போராடக் கட்சி ரீதியாக ஒத்துழைக்க முடியாத நிலைமை ஏற்படவே, கட்சியிலுள்ள கத்தோலிக்கர்கள் தனிப்பட்ட முறையில் கல்விச்சட்டத்தை எதிர்த்துப் போராடலாம் என்று தீர்மானித்தது.

## போராட்ட முனையில் அரசியல் கட்சிகள்

காங்கிரஸ் கட்சியின் இத் தீர்மானம், நாட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துவதை உணர்ந்த கேரள காங்கிரஸ் தலைவர்கள், கம்யூனிஸ்ட் அரசாங்கத்திற்கு எதிராக நாட்டில் எழுந்துள்ள, சாதிவெறியையும் மதவெறியையும் பயன்படுத்திக்கொண்டு, ஆட்சியைக் கவிழ்க்க இதுவே தக்க தருணமென்று நினைத்தது. இதுபோலவே எண்ணியுள்ள பி. எஸ். பி. கட்சியின் கேரளத் தலைவரையும் ஒத்துழைக்கச் சம்மதம் பெற்றது. பி. எஸ். பி. கட்சியின் தலைவரான பட்டம் தாணுப்பிள்ளை, கம்யூனிஸ்ட் கட்சி மந்திரிசபை அமைத்த அன்றைய தினமே எந்தவிதமாகிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் மந்திரி சபையைக் கவிழ்ப்பதே என்னுடைய நோக்கமாயிருக்கும் என்று கூறியிருந்தார். அவருடைய கட்சியில் அவரைப் பின்பற்றுபவர்கள் மாத்திரமேயுள்ளனர். நாயர்சமுதாயத்தவரே பெரும்பான்மையாக உள்ள கட்சியே இது. இதே போன்று சென்ற பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்குச் சம்மதித்து பின், சீட்டு விகிதாசாரத்தால் வந்த தகராறில் பிரிந்து நின்று தேர்தலில் தனியாகப் போட்டியிட்டு, ஒரு இடத்தைக் கூடப் பெறமுடியாமல் படுதோல்வியடைந்த ஆர். எஸ். பி.யும் தனது வைராக்கியத்தைத் தீர்த்துக் கொள்ள இதுவே தருணமென்று எண்ணியது.

## விமோசன சமரச சமிதி

கத்தோலிக்கத் திருச்சபையாளர்களின் பெரும் ஒத்துழைப்பால், சாதிவெறியரான மன்னத்து பத்மனாபன், எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் வரவழைத்துக் கூட்டி, அவர்களின் ஆலோசனைப்படி, கம்யூனிஸ்ட் அரசாங்கம் இராஜினாமாச் செய்யவேண்டும், இல்லையேல் இராஜினாமா செய்கிறவரையிலும் நாங்கள் போராட்டம் நடத்துவோம என்று தீர்மானமும் எடுத்தார். இந்தக் கூட்டு முன்னணிக்கு விமோசன சமரச சமிதி என்று பெயரும் இடப்பட்டது. இதில் காங்கிரஸ் கட்சி, கட்சி ரீதியாகக் கலந்துகொள்ளவில்லை என்றாலும், காங்கிரஸ்காரர்கள் அத்தனைபேரும் இதில் இருந்தனர். காங்கிரஸ் கட்சி தனியாகக் குற்றப்பத்திரம் தயார் செய்து போராடும் என்று வெளியில் சொல்லிக்கொண்டனர். இது ஏதற்காகவென்றால், அவர்களின் மேலிடத்துஎசமானர்களின் கண்ணில் மண்ணைத் தூவ.

சமரச சமிதியின் தலைவராக மன்னத்து பத்மனாபனையே எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். சாதிவெறியைக் கக்கினார் பத்மனாபன். பொதுவுடைமைத் தத்துவத்தையே இந்த நாட்டிலிருந்து விரட்டுவேன் என்றார். இதைக் கேட்டுப் பெருந்தனக்காரர்களும், ஆலைமுதலாளிகளும், தோட்ட முதலாளிகளும், குடும்பம் குடும்பமாக இவரைப் பின்பற்றினர். சுத்த இரத்தமுள்ள நாயராயிருந்தால் என் பக்கம் வந்து ஒத்துழைப்புத்தாருங்கள் என்றார். பொருளாதார ஏற்றத்தாழ்வைக் கூடக் கவனியாமல் சாதிவெறி தலைக்கேறி நாயர் சமுதாயத்தின் பெரும்பகுதி மக்கள், அவர் பின்னால் அணிவகுத்தனர். காங்கிரஸ் இயக்கம் மேலிடத்தாரின் தூண்டுதலின் பேரில் போராட்டம் வலுப்பெற்றால் மத்திய அரசு தலையிட்டு கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கலைத்துவிடும். அதற்கு ஆவன செய்ய எங்களால் இயலும் என்றும், சமரச சமிதிக்கு வாக்குறுதியளித்தது. இவைகள் எல்லாம் சேர்ந்து மன்னத்து பத்மனாபனைத் தலைகால் தெரியாமல் ஆடச்செய்தது. முற்போக்கு எண்ணங்களைப் பழித்தார். கோவில்களிலும் இராச வீதிகளிலும் ஈழவர்களை அனுமதித்தது தவறு என்று மேடைகளில் பேசினார். கம்யூனிஸ்ட் மந்திரிகளை, துரும்பையும்விடக் கேவலமான முறையில் பேசினார். பொதுக்கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் எழுப்பப்பட்ட கண்டனச் சொற்களும், முத்திரை வாக்கியங்களும் ஆபாசம்! ஆபாசம்!! இது போல் எங்குமே பார்க்கமுடியாது. தலைவர்முதல் தொண்டர்கள்வரை இதுதான் நிலை. பத்திரிகைகளோ கைதேர்ந்த கயிறுதிரிப்பு வேலையைக் கூசாமல் செய்துவந்தன.

பத்திரிகா தர்மம் என்பதெல்லாம் காற்றிலே பறக்கவிடப்பட்டு எவ்வளவோ நாட்களாகிவிட்டன. ஒன்றுக்குப் பத்தாக ஒரு செய்தியைத் திரித்து, அதை விகாரமான பாஷையில் எழுதி, சாதிவிஷத்தை அதில் புகுத்தி மக்களைப் படுமோசமான பாதையில் தள்ளிவிட்டன. எந்தவிதமாகிலும், எப்படிப்பட்ட இழிநிலையை உண்டு பண்ணியேனும், கம்யூனிஸ்ட் மந்திரி சபையைக் கவிழ்க்கவேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் இவர்களுக்கிருந்தது.

கம்யூனிஸ்ட் சர்க்காருக்கு ஆதரவாக ஈழவ சமுதாயம் முழுவதும் ஒன்றுதிரண்டு நின்றது. இவர்களும் சமுதாய மாநாடுகள் கூட்டிப் பெரும் ஆரவாரங்களுடன் நடத்தி, மன்னத்து பத்மனாபனின் சாதி வெறியைக் கண்டித்தனர். வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தை எதிர்க்கும் மன்னத்துபத்மனாபனை, தாழ்த்தப்பட்டோர் சங்கங்களும் மாநாடுகள் கூட்டி வன்மையாகக் கண்டனம் தெரிவித்தன. இவைகள் யாவும் வரவிருக்கும் ஆபத்தை எண்ணி, கம்யூனிஸ்ட் ஆட்சியை நிலைநிறுத்தப்பாடுபட்டன. மற்ற அரசியல் கட்சிகளின போக்கைக் கண்டு வெறுப்புற்று, தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒட்டளித்து இவர்களாட்சியும் எப்படி இருக்கிறது பார்க்கலாமென்று எதிர்பார்த்திருக்கும் நடுத்தர மக்களும், நியாய நீதி இல்லாத இப்போராட்டத்தை வெறுத்தனர்.

ஆக, நாட்டு மக்களிடையே இரு முனைகள் தோன்றலாயின. கம்யூனிஸ்ட்டு-அவர்கள் அனுதாபிகள். கம்யூனிஸ்டல்லாதார் இவ்வாறு இரு முனைகள் உண்டு பண்ணப்பட்டன. விரோத ஆபாசங்களும், குரோதங்களும், மக்களிடையே வளர்க்கப்பட்டன. எந்த ஒரு மனிதனையும் இன்னொரு மனிதன் சந்திக்கும்போது, இவன் எந்த ஜாதியில் உள்பட்டவனாக இருப்பான், இவன் அரசாங்கத்தை எதிர்ப்பவனா ஆதரிப்பவனா, என்பதை இருவருமே அறிய விரும்புவர். அந்த அளவுக்கு மக்களிடையே

(12-ம் பக்கம் பார்க்க)

# வேலை தேடிவந்த காளை!

சென்ற இதழ் தொடர்ச்சி

ஒரு மார்வாடியின் கடை. அங்கே வேலன் உட்கார்ந்து கொண்டு இருந்தான். அவன் கையில் தங்க நகைகள் இருந்தன. முதலாளி உள்ளேயிருந்து வெளியே வந்தான். நகைகளையும் வேலனையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் களிமண் மூளையில் சந்தேகம் உதயமாகவில்லை. காலையில் இப்படி ஒரு நல்ல கிராக்கி வந்ததே என்று ஆனந்தம் அடைந்தான். நகைகளைக் கல்லின்மேல் உரைத்தான். அந்த இடத்திலேயே திராவகத்தை ஊற்றிப் பார்த்தான். அப்போது பொங்கிவிட்டிருந்தால், சீக்கிரமே இடத்தைக் காலிசெய்யச் சொல்லிவிட்டிருப்பான். நல்ல தங்கமாக இருந்ததால் முகமலர்ந்து நகைகளை வாங்கிக்கொண்டு, பணத்தைப் பத்துமுறை எண்ணிக் கொடுத்தான். வேண்டியதற்கு மேல் ஐந்தாறு ரூபாயும் வேலனுக்குக் கிடைத்தது.

கை நிறையக் கிடைத்திருக்கும் பணத்தை நினைத்துப் பார்க்கும் போது, வேலனின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் உருண்டோடி வந்து கன்னத்தை நனைத்தது. அவரிடம் பணத்தைக் கொடுத்துவிட்ட பிறகு வேலை கிடைக்காவிட்டால், வாங்கிக்கொண்டபின், ரூபாயைக் கீழே வை என்று, அவனால் அதட்டிக் கேட்கமுடியுமா? அவனுக்கும் இந்த எண்ணம் அரும்பி அழிந்தது. ஈரமாக இருந்த கன்னத்தைத் தன் விரல்களால் தடவித் துடைத்துக் கொண்டான். இப்பொழுது தாமோதரம் பங்களாவிற்கு அருகில் அவன் வந்துவிட்டான்.

வேலன் வந்த நேரத்தில் தாமோதரம் வீட்டில் இல்லை. அழகே உருவெடுத்த அவரின் ஆசை மகளையும் அங்கே காணவில்லை. எங்கோ தந்தையும் மகளும் வெளியில் போயிருப்பதாக, வேலைக்காரர்கள் கூறினார்கள்.

அப்போது சன்னலின் பட்டுத் திரையை விலக்கி எட்டிப் பார்த்த தமோதரத்தின் மனைவி, வேலன் அங்கே நிற்பதைக் கண்டாள். அதிகார தொனியில் 'யாரது' என்று அதட்டினாள். அவன் திரும்பிப் பார்த்ததும், அப்பொழுதுதான் அவனைக் கண்டவள்போல முகத்திலே அபிநயம் காட்டி, உள்ளே வந்து உட்காரும்படி அன்பழைப்பு விடுத்தாள். அந்த இடத்திலேயே அவன்

வி. ஆர். துரை

தயங்கி நின்று தவிக்கையில், அவளே வெளியில் வந்து உள்ளே அழைத்துச் சென்றாள். மெல்லிய நைலான் துணிகளால் அவள் மினுக்கிக்கொண்டிருப்பதைக் கண்ணால் பார்ப்பதற்குக்கூட முடியாமல் இருந்தது. அறைக்குள் நுழைந்ததும் சோபாவிலிருந்த பஞ்சு மெத்தையில், அவனை உட்காரும்படி ஆள்காட்டி விரலால் சுட்டிக் காட்டிவிட்டு, அவசரமாக வெளியே சென்றவள், ஒரு கண்ணாடித் தட்டில் பழத்தினுசுகளும் பிஸ்கட்டுகளும் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். அது வரையிலும் உட்காராமல் தவம் செய்யும் வேலனைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவன் எதிரில் தட்டுடன் போய் நின்று, எடுத்துச் சாப்பிடும்படி வற்புறுத்தினான். சிறிதும் கூச்சப்படாமல் அவனருகில் அவள் நெருங்கி நின்றாள்.

வேலனுக்கு ஒன்றுமே புரியவில்லை. வெலவெலத்துப் போய்விட்டான். வார்த்தைகள் வெளியே வரவில்லை. தொண்டையில் ஈரமே இல்லை. 'வேறு யாராவது என்று தப்பாக என்னை நினைத்துக்கொண்டு இப்படி உபசாரத்தில் இறங்கிவிட்டாளா?' இந்தத் தினுசில் அவன் எண்ணம் சென்றது. அதற்குள் படுக்கையில் ஒரு பக்கமாகத் திரும்பி, வில்லைப்போல் கையை வளைத்து, உள்ளங்கையில் தலையை வைத்து, அவனையே இமை கொட்டாமல் அவள் உற்று நோக்கினாள். "பரவாயில்லை, வேலா! எடுத்துச் சாப்பிடு" என்றவள் வேண்டியதும், "இல்லையம்மா! இப்பொழுதுதான் நான் சாப்பிட்டேன்" என்றவன் சொல்லி முடிப்பதற்குள் எழுந்து வந்த அவள், ஒரு வாழைப் பழத்தை உரித்து அவன் வாயில் திணிப்பதற்கும், பார்க்கக்கூடாத அந்தக் கோரக் காட்சியை, தாமோதரம் தம் கண்ணால் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

ஆத்திரத்தால் தாமோதரத்தின் விழிகள் எட்டிப் பழங்களாகி விட்டன. நல்ல வேளையாக, அறிவை அந்த ஆத்திரத்தில் அவர் இழந்து விடவில்லை. மனம்போனபடி நடக்கும் முட்டாள்வழியில்செல்லாமல், தன் வழிக்கு அந்த மனத்தைக்கொண்டுவந்து திட்டப்படுத்திக் கொண்டார். அங்கிருந்து ஓடிவிடப் பார்க்கும் வேலனை அதட்டி, அங்கேயே ஒரு மூலையில் நிற்க வைத்தார். அதே சூட்டில் வேலனுக்கு அன்று வந்திருக்கும் தபாலை, தபால்காரனிடமிருந்து வாங்கி வந்து தன் கையில் கொடுக்கும்படி கத்தினார்.

தாமோதரம், வீட்டிலேயே இருந்த டெலிபோன் மூலமாக, பெங்களூரில் யாருடனோ பேசி ஓய்ந்தார். வாடகைக் கார் ஒன்று சில மணி நேரம் கழித்து, அவர் வீட்டின் முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய தாயும் தந்தையும் மகளுக்கு என்ன ஆபத்தோ என்று அங்கலாய்த்துக்கொண்டே ஓடி வந்தார்கள். 'டேஞ்சர்' என்று தாமோதரம் கொடுத்த தந்தி, மனைவியின் பெற்றோர்களைப் பறந்தோடி வரும்படி செய்துவிட்டது. கல்லைப்போல் நிற்கும் மகளைக் கண்டு, ஒன்றும் புரியாமல் அவர்கள் விழித்தார்கள். எல்லோரும் அசல் ஊமைகளாக இருந்தார்கள். மயான அமைதி அங்கே நிலவிக் கொண்டிருந்தது.

கதை முழுவதையும் தாமோதரம் பெற்றவர்களிடம் பரபரப்பு இல்லாமல் சமாதானமாகவே கூறி முடித்தார். கையிலே சில ஆயிரத்தையும் கொடுத்து, நல்ல முறையிலேயே மனைவியைப் 'பைசல்' செய்துவிட்டார். அதற்குள் கடைத்தெருக்களில் எல்லாம் இந்த விஷயத்தைப்பற்றி வெல்ல வெல்லமாகப் பேசிக்கொண்டார்கள். இப்பொழுது அவள் யாருக்கு மனைவி? ஊரே சிரித்தது. தாயும் தந்தையும் மதிப்பிற்குரிய அவர்களின் மகளும், வந்த வாடகைக் காரிலேயே பெங்களூருக்கு பங்களாவை விட்டுத் தொலைந்தார்கள். அமைதியாக இவற்றை எல்லாம் அமுதவல்லி கவனித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு குற்றமும் செய்யாத வேலனின் விழிகளில், தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. அதை அவனால் என்ன முயன்றும் தடுத்து நிறுத்த முடியவில்லை. வேலை தேடிக் கொடுக்காவிட்டாலும், பணத்தை வாங்கிக் கொண்டு, உயிரோடு இங்கிருந்து வெளியே அனுப்பிவைத்தால் போதுமென்று நினைத்தான். பயம் அவன் உடனேயே பிறந்திருந்தது. தனக்கொரு நல்ல விடுதலை, தாமோதரத்திடமிருந்து கிடைக்கும் என்று சிறிதும் அவன் எதிர்பார்க்கவில்லை.

தாமோதரம் அவனை நெருங்கி வந்தபோது, தன் உயிரைப் பறிக்க வருவதைப்போல், வேலன் பயந்தான். 'ஐயோ' என்று அலறிவிடுவான்போல் தோன்றியது. அவரோ அவன் முதுகில் அன்பாகத் தட்டிக் கொடுத்து, சற்றும் அவன் எதிர்பார்க்காத வகையில், ஏற்பாடு செய்திருந்தபடி அன்றைய தபாலில் வேலையில் சேரும்படி வேலனுக்கு வந்திருந்த உத்தரவை அவன் கையில் கொடுத்துத் திகைப்படையச் செய்தார். வேலன் கொடுக்கச் சென்ற நூறு ரூபாயையும், திருப்பி அவன் கையிலேயே கொடுத்து, "வேலைக்குச் செல்வது பெரிதல்ல; செவ்வனே கடமையைச் செய்யவேண்டும்" என்று அவர் கூறியதைக் கேட்டு, அவனால் ஒன்றுமே திருப்பிச்சொல்ல முடியவில்லை. கை எடுத்துக் கும்பிட்டுவிட்டு, அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டான்.

அமுதவல்லியைத் தாமோதரம் செல்லமாக அழைத்தார். வாட்டம் மகளின் திங்கள் முகத்தில் உறவாடிக் கொண்டிருந்தது. அதை அவள் மறைக்க முயற்சித்தாள். தாமோதரத்தின் மனம் குழம்பியது. "அப்பா! நான் அவரை..." வாக்கியத்தை அவள் முடிக்கவில்லை. "அமுதா! நான் உன் எண்ணத்தை அறிவேன், இருந்தாலும் உன் தாய்க்கு, நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியாக வேண்டும். இல்லாவிட்டால் உன் விருப்பப்படியே......" அதற்கு மேலும் அப்பாவை அவள் பேசுவதற்கு விடவில்லை. என்ன வாக்கு என்றவள் தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. "தந்தை சொல்லைத் தட்டாமல், நீ நடந்து கொள்ளவேண்டும் செல்வமே!" உடலைவிட்டு உயிர் பிரிந்து போகும் நேரத்தில், தன் கையைப் பிடித்து மார்பிலே வைத்துக்கொண்டு கண்ணீர் வழியத் தட்டுத் தடுமாறிக் கடைசியாகத் தாய் சொல்லிய வார்த்தைகள், அமுதவல்லியின் நினைவிலே வந்து நின்றுவிட்டன. அந்த ஒரே வாக்கியம், அவளின் உள்ளத்தில் ஒரு புதிய நிலையையே ஏற்படுத்திவிட்டது. அன்னையின் திருவுருவப் படத்தின் முன்னால் ஓடிச் சென்று, விழுந்து வணங்கிக் கண்ணீர் வடித்தாள். அலையும் தன் மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டாள். முற்றிலும் தன்னை அவள் மாற்றிக் கொண்டாள். மனதைச் சாமர்த்தியமாக வென்றுவிட்ட அவளின் முகத்தில், சிறிது சிறிதாக மகிழ்ச்சி மலர்ந்த வண்ணம் இருந்தது. பழைய உள்ளம் அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது. குதூகலமான புதிய உள்ளத்தை எங்கிருந்தோ அவள் பெற்றாள். அதுவரையில் பொறுமையாக இருந்த தாமோதரம் எழுந்துவந்து, "நீதான் என் அன்பு மகள்" என்று மகிழ்ச்சி பொங்கச் சொல்லி அமுதாவை அணைத்துக்கொண்டார்.

வேலன் நடந்துகொண்டிருந்தான். அவன் நடையிலே ஓட்டம் கலந்திருந்தது. 'எல்லோரையும் போல அவர் சாதாரண மனிதர் அல்ல; ஒரு பெரிய மனிதர்; மனித மாணிக்கம்' அதற்குமேல் அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. சிறிது தூரம் நடந்தான். மீண்டும் அவன் மனத்தில், 'ஒன்றிரண்டு நல்ல மனிதர்கள், இன்னும் உலகத்தில் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் சாகக்கூடாது. பல்லாண்டு, பல்லாண்டு வாழவேண்டும்' என்னும் கருத்து உதயமாகியது. அதை ஆமோதிப்பதைப் போல, அப்போது திடீரென்று பலமாகக் காற்றுவீசி அடங்கியது.

பாதையின் ஒரு ஓரத்தில் வேகமாக நடந்துகொண்டிருந்த வேலன் மீது, மோதிவிடுவதைப் போலவே வந்த பிளிமவுத் கார் ஒன்று 'டர்...ர்' என்ற பெருஞ் சத்தத்தோடு அவன் பக்கத்தில் வந்து நின்றது. அரை அங்குலமாவது டயர் தேய்ந்திருக்கும். அந்தக்காரை ஓட்டிவந்தவர் தாமோதரம்தான். அமுதவல்லி பின் சீட்டில் உட்கார்ந்துகொண்டு இருந்தாள். அவளின் வட்ட முகத்தில் ஒரே சிரிப்புமயம். கிடைத்த வேலையும் திரும்பிப் போய்விடுமோ என்று வேலன் பயந்து நின்றான். காரின் பின் சீட்டில் ஏறி உட்காரும்படி, தாமோதரம் வேலனைப் பார்த்துக்கூறினார். இல்லை, அதட்டினார், அங்கேதான் அமுதவல்லி ஒயிலாக உட்கார்ந்திருந்தாள். காரின் கதவை அவள் திறந்ததும் ஒரு ஓரத்தில் வேலன் ஏறி அடக்கமாக உட்கார்ந்துகொண்டான். அவனுக்குப் பயம்! பொங்கிவரும் சிரிப்பை அவள் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

ஒரு தனி அறை. அலங்காரமாக இருந்தது. இலட்சாதிபதி வேலனும் அமுதவல்லியும் அந்த அறையில் இருந்தார்கள். அறை முழுவதும் கும்மென்று வாசனை வீசிக்கொண்டிருந்தது. கண்களுக்குச் சில்லென்றிருந்த அவளின் உடலழகை, உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் இமை கொட்டாமல், அவன் பார்த்த

படியே இருந்தான். நன்றாக அவன் பார்த்து மகிழவேண்டும் என்பதற்காகத்தான், அவள் அப்படி நின்றுகொண்டிருக்கிறாளோ? செடியிலிருக்கும் மலர், மங்கையின் அடர்ந்த கூந்தலில் வாவென்று அழைத்துச் சிரிக்கும்போது, முகம் வைத்து முகர்ந்தால் தருகின்ற மயக்கமே தனிதான். எவ்வளவோ அற்புதங்கள் நிறைந்த இந்த அகிலத்தில், அதற்கு ஈடாக ஒன்றே ஒன்றைச் சொல்லமுடியுமா? இன்ப போதை ஊட்டி அந்த மலர் மணம் திக்குத் தெரியாமல் திண்டாட வைக்கும்போது, அடடா, எப்படிச் சொல்லாரம் கட்டுவது? அப்போதிருந்த நிலைக்கேற்ப அவன் மனம் வர்ணித்தது. அதை உணர்ந்து கொண்டதுபோல், அவள்முகம் குப்பென்று சிவந்தது. 'ஆ' என்று வாயைத் திறக்கச் சொல்லிக் கெஞ்சினாள். அவனும் சின்னக் குழந்தையைப்போல் வாயைத் திறந்தான். ஒரு பிடி சீனியை அவள் கொட்டினாள். அது பரிசு! அவள் குறும்பு எல்லை மீறவே' பகல் நேரமானதால் சிரித்துக்கொண்டே அங்கிருந்து மெல்ல நழுவிடப்பார்த்தாள். அவ்வளவு சுலபமாக அவளுக்கு விடுதலை கிடைக்கவில்லை. இப்பொழுது அவள் சோபாவில் இரண்டு கால்களையும் தொங்கப்போட்டுக்கொண்டு மெத்தையின்மேல் சிங்காரமாக உட்கார்ந்திருந்தாள். அவள் மடியை அவன் தலைக்குத் தலையணையாக வழங்கி இருந்தாள். இருவரும் அங்கே முழுக்க முழுக்க அனுபவித்து, இன்பத்தைக்குடம் குடமாகப் பருகிக்கொண்டிருந்தார்கள்.

மகள் தன்வார்த்தைக்குக் கட்டுப்படுகின்றாளா, அல்லது தூக்கி எறிந்துபேசுகின்றாளா, என்பதைத் தெரிந்துகொள்ளத் தாமோதரம் ஒரு சிறு சோதனை நடத்திப் பார்த்தார். வெற்றி அமுதவல்லியின் பக்கமேஇருந்தது. அவரேதோல்வி அடைந்தார். மகளின் மனம் போலவே மணமகன் கிடைத்தான். அவள் நினைத்தபடியே மழை பெய்தது.

ஒருவாறு எல்லாம் நலமாகவே முடிந்தது என்னும் மகிழ்ச்சி, தாமோதரத்தின் முகத்திலே ஒளிவிட்டு வீசிக்கொண்டிருந்தது.

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

பிளவுணர்ச்சி வளர்க்கப்பட்டது. யார் தோல்வியடைவர், யார் வெற்றி பெறுவர் என்ற வைராக்கிய புத்தி இரு பிரிவினர்களிடையேயும் தோன்றலாயின. இவ்வளவிற்கும், இந்தப் போராட்டந்தான். ஆரம்ப காலத்தில் அரசாங்கம் தக்க முறையில் கவனித்து, இதை முளையிலேயே அடக்கியிருந்தால், நிலைமை இந்த அளவிற்கு வந்திருக்காது. இதில் ஒரு இரகசியம் என்னவென்றால், சர்க்கார் இலாகாக்களிலேயே நாயர் வகுப்பைச் சார்ந்த சில பெரிய அதிகாரிகளும், பல சாதாரண அதிகாரிகளும், கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிராக ஆரம்பகாலம் முதலே இரகசியமாக வேலைசெய்து வந்தனர். இவை எல்லாவற்றிற்கும் முதல் காரணம் சாதி வெறியே.

இந்தப் போராட்ட காலத்திற்கிடையில் அம்புலப்புழையில் ஈழவர்களின் மாநாடொன்று நடத்தப்பட்டது. அது பெரிய அளவிலும் நடைபெற்றது. 'கேரளகௌமுதி' ஆசிரியர் கே. சுகுமாரன், அய்யப்பன், ஆகிய இருபெரும் ஈழவ சமுதாயத் தலைவர்கள் அதில் கலந்துகொண்டனர். மன்னத்து பத்மனாபனின் சாதி வெறியை எதிர்த்தே இம்மாநாடு கூட்டப்பட்டது.

இன்று மத்திய சர்க்கார் என்று ஒன்று இருப்பதனால் அவர்களின் துணை நமக்கு நிச்சயமாக கிடைக்கும் என்று பிற்போக்குச் சக்திகளுக்கு தோன்றியதினால்தான் அவைகள் தைரியத்துடன் தலைதூக்கிப் பேயாட்டம்ஆடின. அவைகளின் எண்ணப்படி வெற்றியும் கண்டன.

நாம் சுதந்திரமாக இருந்திருந்தால்......... சிந்திக்கவேண்டும் பொதுவுடைமைத் தோழர்கள்.

❋

# செங்கற்பட்டு மாவட்ட 3-வது தி. மு. க. மாநாடு

## பூவிருந்தவல்லி

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாட்டுப் பந்தலில் புத்தகக் கடைகள், படக்கடைகள் மற்றும் கைத்தறி ஆடைக்கடைகள் வைக்க விரும்புவோர் 10'X10' பரப்புள்ள இடத்தில் கடைகள் வைத்துக்கொள்வதற்கு ரூ. 25. மாநாட்டுச் செயலாளரிடம் செலுத்தி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

முகவரி:- **செயலாளர் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாட்டு அலுவலகம், பூவிருந்தவல்லி.**

*

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு,

அன்புடையீர்,

நமது மாவட்ட மாநாடு செப்டம்பர் 12, 13 நாட்களில் சிறப்புற நடைபெறுவதற்கு எல்லா வசதிகளும் செவ்வனே செய்யப்பட்டு வருகிறது. மாவட்டச் செயற்குழுவில் தீர்மானித்தபடி ஒவ்வொரு கிளைக் கழகமும் அதனதன் பங்குத் தொகை ரூ. 20/ம், வரவேற்புக்குழு உறுப்பினர் ரூ. 5/-ம் பிரதிநிதி தொகை ரூ. 3/-வீதம், **அண்ணாதுரை, பொருளாளர், 9-அவின்யூரோடு நுங்கம்பாக்கம், சென்னை.** என்ற முகவரிக்கு இது வரையிலும் அனுப்பாத தோழர்கள் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறோம். அவற்றோடு ஒவ்வொரு கிளைக் கழகமும் அவ்வூர் பெயர்பொறிக்கப்பட்ட நமதுகழககொடியினைத் தாங்கி மாநாட்டு ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் அதற்கான ஏற்பாடுகளுடன் வருகைதர வேண்டுகிறோம். ஊர்வலத்தை மிகச் சிறப்பாக யானை, குதிரை, பொய்க்கால் குதிரை, இரதம், தாரை தப்பட்டை மேளவாத்தியங்களுடன் நடைபெற ஏற்பாடுகள் செய்திருப்பதோடு, மேற்படி ஊர்வலத்தையும் மாநாட்டு நிகழ்ச்சிகளையும் திரைப்படம் எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். மாநாட்டிற்குத் தீர்மானம் அனுப்பவிரும்பும் கிளைக்கழகத் தோழர்கள் 2—9—59-க்குள் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

அன்புள்ள,
**சி. வி. எம். அண்ணாமலை**
**டி. இராசரத்தினம்**
**டி. கே. போளூரான்**
**ஜே. ஏ. வகாப்பு**
மாநாட்டுச் செயலாளர்கள்.

# ★ மலரும் மாணவர் ★

மாணவ உலகின் மனப்பாங்கு, காலக்கண்ணாடி, இன எழுச்சியின் எழில்மிகு சித்திரம், உரிமைப்போர் முரசொலி, விடுதலை விருத்தம், என்பதுபற்றி, எவரே அறியாதார்! வாழ்க்கை எனும் பொய்கையிலே, ஆரிய நச்சு கலக்கப்படாத பருவம், பகுத்தறிவு எனும் பகலவன் ஒளி பட்டு, விஷக்கிருமிகளை ஒழித்திடும் பருவம், குடும்பம் எனும் கோல் கொண்டு துழாவி, சேற்றை மேலுக்குத் தள்ளி, நீரைப்பாழாக்காப் பருவம், சுயநலமும் சுகபோகப்பித்தும் எருமையெனப் புகுந்து இருதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம். சந்தனக்காட்டைக் கடந்து, மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்கும் தென்றல் போல, சுருதியும் தாளமும் அமைந்து, சொற்சுவையும் பொருட்சுவையும் இழைந்து கேட்போருக்குக் களிப்பூட்டுவதோடு கருத்தூட்டும் இசைபோல, உள்ளது, மாணவப்பருவம். ஏடுகளிலே நாடு பலகண்டு, வீடுபெறக் காடு செலும் வீணர்போலன்றி, பிறந்த வீடாம் தமிழகத்தின் தனிப்பண்பு தெரிந்து, மகிழ்ந்து, உலகுக்கு அதனை உரைத்து உவகைமிகுந்து "தாயின்மேல் ஆணை, தந்தைமேல் ஆணை, தமிழகமேல் ஆணை, தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே நான் தோழரே உரைக்கின்றேன்" என்று உள்ளத்திலே ஊறிடும் உணர்ச்சியினை அறிவிக்கும் ஆற்றல்மிக்கது, மாணவப்பருவம்.

மாயாவாதமும் மனமருட்சியும், நெருங்க நடுங்கும் நிலை அது! புராணமும் புல்லர் மொழியும் புகப் பயப்படும் அகம் அது! பதவியும் படாடோபமும், பத்து காதத்தில் நிற்கும், அந்தப்பண்பிலே திளைத்து அன்பிலே மிகுந்து, ஆர்வத்திலே குளித்து, ஆற்றலிலே சிறந்து, காணக் காட்சியாய், கேட்கக் கீதமாய், விளங்கும் வாலிப வீரர்கள் முன்பு! வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரர்கள், கைகொட்டி நகைத்து மட்டித் தனத்தை மட்டந் தட்டும் மாவீரர்கள், சுலோகங்களால் சுகவாழ்வு நடத்தும் சுயநலமிகளைச் "சுருட்டிக்கொள் உன் சூதை" என்றுரைக்கும் சூரர்கள், மாணவர்கள். அடிமைத்தனம், இருத்தலைக்கண்டால் அவர்களின் விழி கனல்கக்கும், மொழி வீரத்தைப் பொழியும், உள்ளம் ஓராயிரம் எண்ணங்களை வெளியே தள்ளும், உணர்ச்சியின் உருவமாகி விடுவர், உரிமை உரிமை என்று உரைப்பர், அந்த நடமாடும் எஃகுக் கம்பிகள், நாட்டு விடுதலைப் போருக்கேற்ற நல்ல தம்பிகள்! பாடுபட்டுழைத்துப் பலன் காணுமக்களைக் கண்டால், கண்களிலே நீர் சோரும், கரங்கள் உதவிசெய்ய முன்வரும், சிரங்கள் சோகத்தால் அசையும், சிந்தனை, சமதர்மத்தில் சென்று பதியும், மாணவர்கட்கு.

**சி. என். ஏ.**

இத்தகையமாண்புடையமணிகளே, அறியாமை எனும் அந்தகாரத்தால் சூழப்பட்டுள்ள தமிழகத்திலே தூங்காவிளக்குகள்! மேலுலகத் தரகர்களென மேனிநோகாது வாழ வழிசெய்து கொண்டு, இளித்தவாயரை ஏய்த்துப் பிழைக்கும் இனத்தினை இனி ஆதிக்கத்திலிருக்கவிடோம், என இடிமுழக்கம்போல் இயம்பிடும்,

> **15** ஆண்டுகளுக்கு முன்பு! மாணவர்கள், நம்மிடம் அடியெடுத்து வைத்த போது!! குடந்தையில் கூட்டினர், மாநாடு. அப்போது, **5—3—44** திராவிடநாடு ஏட்டில், தீட்டினோம். சென்னையில் கூடிய மாணவ உலகுக்கு மீண்டும், அதனைத் தருகிறோம்.

இடுக்கணுக்கஞ்சா இளஞ் சிங்கங்கள் மாணவர்கள்! இனத்துக்கு இவர்களே ஈட்டிமுனைகள்! சனாதனத்தை அழிக்கும், சுரங்கவெடிகள்! சாஸ்திரம் எனும் சப்மெரைனைத் தகர்த்தெரியும் டார்ப்பிடோக்கள்! வைதீகபுரி மீது பகுத்தறிவுக் குண்டுகளை வீசும் வீர விமானிகள்! சமதர்மபுரிக்கு மக்களை வெற்றிகரமாக அழைத்துச் செல்லும் முன்னணிப்படை! யுகயுகமாகக் கட்டி, அவ்வப்பொழுது பழுதுபார்க்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்ட பார்ப்பனீயக் கோட்டைகளைப் படுசூரணமாக்கும் டாங்கிப்படை. ஆம்! மானத்தை மீட்கும் போரிலே, மாணவரன்றி வேறுயார், செயலாற்றும் திறம் படைத்தவர்கள்! அவர்களுக்கன்றிப் பிறருக்கு ஏது, அந்த உரிமை! அவர்களாலன்றி வேறு யாரால் சாதிக்கமுடியும். அந்த மகத்தான வேலையை!! அவர்களையன்றி வேறுயாரை நம்பி, விடுதலை இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது, வீட்டிலுள்ள பேழையிலே விலையுயர்ந்த நவரத்தினத்தைக் குவிக்கவேண்டுமென்று எண்ணுபவர், இதற்கு இலாயக்கா? இல்லையே! வறுமை வளர வளர, இத்தகையோரின் பேழை நிறையும், ஆனால் வறுமை வளர வளர, பேழைகளை உடைத்தெறியும் கோபப்பித்தர் கூட்டமும் வளரும், எனவே, பேழை உடையோர் கோழையராகி, எந்த நேரத்தில் என்னவிதமான ஆபத்து வருமோ என்று நினைத்து, உடல் வியர்த்து, நடமாடும் பிணமாகி நலிவர் அவரால் என்னகாரியத்தைச் சாதிக்கமுடியும். பதவி! பதவி! மேலும் மேலும் பதவி! என்று காவடி தூக்கிடுவோரால் என்ன செய்யமுடியும்? கிடைத்ததைக் காப்பாற்றிக்கொள்ளக் கெஞ்சிக் கூத்தாடவும். மேலால் பதவிபெற மண்டியிடவும் துரைமார் முன் தூபமிட்டுத் தாண்டவமாடவும் அதட்டிப் பேசுவோருக்குச் சிந்துபாடவும். அடுத்துக்கெடுப்போருக்கு ஆசாபாசமறிந்து "ஆகுதி" தரவும் நேரமிருக்குமே தவிர. நாடு, இனம். எனும் சொல்லை நினைக்க நேரம் எங்கிருந்து கிடைக்கும்! பணமும் பதவியும் குறிக்கோளாகக்கொண்டு விட்டால். பணிபுரியும் பண்பு பிறக்காது! மாணவரே, புறக்காட்சியிலே காணும் புண்போக்கத் தமது அகத்திலே அருவிபோலோடும், ஆர்வமெனும் மருந்தெடுத்திட முடியும். என்வேதான் அம்மாணவர்களின் மன எழுச்சியைக் காண நமக்கு மகிழ்ச்சி—மட்டற்ற மகிழ்ச்சி பிறக்கிறது. இருள் நீங்கும் மருள் மடியும்! தீதுதொலையும், அடிமைத்தனம் அகலும்;

புதுவாழ்வு பிறக்கும். பொன்மலர் மணம்பெறும், என்ற நம்பிக்கை பிறக்கிறது,

கள்ளன், வெள்ளை உள்ளங்கொண்டோரை, மெள்ள வேறு பக்கம் திருப்பிவிட்டுக் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு ஓடுதல்போல, இங்கு, தர்மோபதேசம் பேசித் தரித்திரத்தை வளர்த்து, மந்திர உச்சாடனம் செய்து மதியினைத் தைத் தழைக்கச் செய்து, திருவிளையாடலைப் புகன்று தீயர் திரைமறைவிலே நின்று பொருள் கவராடுதலை முறையாக்கிய கூட்டத்தினர் சமுதாயக் கொடுமை ஒரு புறமும் சாதிப்பூசல் பிறிதோர் புறமும், வைதீகம் ஓர் புறமும் வீணர்வாய் வேதாந்தம் வேறோர் புறமும் இருந்துகொண்டு, வீரரைக் கோழைகளாக்கி, வாலிபரை வயோதிகராக்கி, கலையை வலையாக்கி, மக்கள் வாழ்வை வழுக்கு நிலமாக்கி கோபுரத்தைக் குட்டிச் சுவராக்கி, தொங்கு வயிற்றை ஆதரித்துத் துவளும் உடலை நிராகரித்து, நிந்திப்போருக்கு வந்தனை புரிந்து கொடுமையைத்தூவி, மடமையை நீர்பாய்ச்சி, அறிவிலித்தனம் விளைந்ததும் அறுத்தெடுத்து அதனை ஆங்கிலேயனிடம் காட்ட, அவன், "ஆஹா! நன்று, நன்று! இந்நிலை இங்குள்ள மட்டும், எனக்கொரு குறையுமில்லை" என்று கூறிடக்கேட்டுக் கூத்தாடுவார். இதனை மறைத்து, மாணவர் உலகை, வெள்ளையர் மீது ஏவிவிட்டனர், ஒரு சாரார். வெப்பமிகுதியால் வெடித்துள்ள நிலத்திலே புதுவெள்ளம் வேகமாகப் புகுவதுபோல, நயவஞ்சகரின் சொல், மாணவர் மனதிலே புகுந்தது, அதன் பயனை, அக்கூட்டம் பெற்றுக்கொழுத்தது, மாணவர் உலகம் உழைத்து அலுத்தது!

இன்று! "நன்று, நன்று நமது நாடகம் இனி நடவாது" என்று அந்த நயவஞ்சகக்கூட்டம், கூறும். திராவிட மாணவர்களன்றோ கூடினர்!

இனத்தின் இன்றைய இழிநிலைக்கு, அவர்கள் காரணம் கேட்கின்றனர். இழிவையும் பழியையும் துடைத்துப் புதுச்சித்திரம்வரைய அவர்கள் தீட்டுகோலுடன் நிற்கின்றனர். உரோம்வரை சென்று வாணிபம் நடாத்திய இனம், இன்று ஏன், பணியாக்களின் பணியாளாகிவிட்டது என்று கேட்கின்றனர்! பழமுதிர்ச் சோலையாம் தமிழகம், ஏன் இன்று பயமிகுபடு குழியாகிவிட்டது என்று கேட்கின்றனர். நாடாண்ட மக்கள் இன்று நாடோடிகளான காரணம் என்னவென்று கேட்கின்றனர். வளமிகுந்த நாட்டிலே வறுமைமிகுந்ததேன் என்று கேட்கின்றனர். வீரம் செறிந்த நாட்டிலே இன்று வீணர்மிகுந்தது எப்படி என்று கேட்கின்றனர். இமயத்திலே வெற்றிக்கொடி நாட்டிய இனத்தார், இன்று ஏங்கிக் கிடப்பானேன் என்று கேட்கின்றனர். எங்கே திராவிடரின் வரலாறும்? எங்கே திராவிட வீரம்? என்னவாயிற்று திராவிட இன ஒழுக்கம்? ஏன் ஆரியக் கற்பனைகள், மதமாகக், கலையாக நடமாடுகின்றன? ஏன், ஜாதி என்ற சொல்லறியா பூமியில், ஆயிரமுண்டிங்கு ஜாதி என்றுகூற வேண்டி வந்தது? யார் இந்தக் கேவல நிலைக்குக், கொடுமைக்கு, மடமைக்குக் காரணம் என்று கேட்கின்றனர்! மாணவர்மனதிலே, இக்கேள்வி எழுந்ததென்றால், அது சாமான்யமானது என்று அசடரும் கசடரும் தவிர, மற்றையோர் கருதார். இக்கேள்விகளே, கொடுமைகளை ஒழிக்க உலகில் பல்வேறு இடங்களிலே தோன்றிய புரட்சிகளுக்கு, முன்னுரைகளாக இருந்தன, என்பதை உலக வரலாற்றுரை தெரிந்தோர் உணர முடியும். "எங்கே என்வயல்?" என்று கேட்கிறான் வீரன்; ஒரு குப்பை மேட்டினைக் காட்டுகின்றனர். 'எங்கே, என் சோலை,' என்று கேட்கிறான், முட்புதர்கள் செறிந்த இடத்தைக் காட்டுகின்றனர். "என் மாளிகை?" என்று கேட்கிறான் சரிந்துபோன சுவரும், நொறுங்கிப்போன கூறையும் காட்டப்படுகிறது. "என் பேழை?" என்று கேட்கிறான், கைவிரிக்கின்றனர், இல்லை என்பதற்கு அறிகுறியாக. "ஆஹா! இப்படியா நேரிட்டுவிட்டது? இவ்வளவு அவதியிலே சிக்கி என் அன்னை என்ன கஷ்டமனுபவிக்கிறாரோ" என்று கதறுகிறான் காளை. "எங்கே என் அன்னை?" என்று கேட்கிறான், தலைவிரிகோலமாகத் தள்ளாடி நடந்து, கையில் பிச்சைப் பாத்திரமேந்திய கிழவியைக் காட்டுகிறார்கள்! என்ன செய்வான் வீரன்!!

திராவிட மாணவர்கள், தமது நாட்டுப் பண்டைய நிலைமையை அறிந்தார்கள், இன்றைய நிலையைத் தெரிந்தார்கள். அவர்களின் மனம், நாம் மேலே கூறிய வீரனுடைய மனம்போலன்றி வேறெப்படி இருந்திருக்க முடியும்! "எவனால் என் மனைக்கும் தாய்க்கும் இந்நிலை ஏற்பட்டது" என்று வீரன் கேட்காதிருக்க முடியுமா, திராவிட மாணவர்களும் இதுபோலவே, எமது தரணி தாழ்ச்சியுற்றதன் காரணம் என்ன? எவரால் தாழ்ச்சியுற்றது? என்று கேட்காதிருக்க முடியுமா? என்ன பதில் கிடைத்திருக்க முடியும்? ஆரியம் அழித்தது, உன் அழகிய நாட்டை, ஆண்மையுள்ள நாட்டை, அறிவு மலர்ந்த நாட்டை, கவிதை கூத்தாடிய நாட்டை, பொன்னும் மணியும் கொழுத்திருந்த நாட்டை, என்பதன்றி வேறென்ன காரணம் காட்ட முடியும்!!

திராவிட மாணவர்களே! நீண்ட நாட்கள் கழித்து, நாட்டுப் பற்றும் இனப்பற்றும் பூத்திருக்கிறது. இது சொற்பொழிவுச் சோலையாக மட்டும் நின்றுவிடக் கூடாது, கற்பனைப் பூங்காவிலே உலவ முடியாது! இன எழுச்சியைப் பரப்புங்கள். ஆரியத்தை அழிக்கும் ஆர்வத்தை வளருங்கள். சாதிபேதத்தைச் சாடுங்கள். வைதீகத்தை வீழ்த்துங்கள். கடவுள், மதம், புராணம், கலை, எனும் பல்வேறு பகட்டான சதிகண்டு சளைக்காதீர், ஓய்வுகொண்டு உறங்காதீர், உங்கள் கரமே, புது உலகச் சிற்பம் சமைக்கவல்லது. இன்று நீங்கள் காணும் கோரக்காட்சியினைக் கண்டு மனம் நொந்து, மருந்து வகை பல தேடினர், ஒன்றும் பலிக்கவில்லை. ஒரே ஒரு மருந்து, கடைசி மருந்து, நாட்டுப் பிரிவினை, என்பது திராவிடநாடு திராவிடருக்கே என்பதன்றி, வேறோர் மருந்தில்லை. இதனை உணருங்கள், உறுதி கொள்ளுங்கள், உற்சாகத்தோடு உழைக்க வாருங்கள், வெற்றி நமதே!

4-ம் பக்கத் தொடர்ச்சி

எந்த நாட்டின் அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டாலும், ஏன், இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைச் சரிதத்தை எடுத்துப் புரட்டினாலும், தெளிவாக விளங்கும் மாணவர்களின் பங்கு எந்தளவுக்கு இருந்திருக்கிறது, எந்தளவுக்கு அவர்களால் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்கிற விபரம். விடுதலைக்குப் போராடும் எந்த இயக்கமும், தன்னுடைய இலட்சியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்வதால், எங்கெங்கிருந்து ஆதரவுகள் கிட்டினாலும், அவைகளைப் பயன்படுத்தத்தான் விழையும். தாயகத்துக்கு விடுதலை பெறப் பாடுபடும் நாமும், அவ்வழி செல்வதில் தவறில்லை. ஆயினும்கூடப் பொதுநலனை உத்தேசித்து, மாணவர்களின் இளம்பருவம் வீணாகலாகாது எனும் விழைவால், அவர்கள் நேரடி அரசியலில் பங்குகொள்ளலாகாது எனும் முடிவுக்குப் பெருந்தன்மையாகக் கட்டுப்படுகிறோம்.

நமதரும் மாணவர்களும், அதனை மனமொப்பி ஏற்றிருக்கிறார்கள்!! "ஏற்றால் என்ன? இன்றும் திராவிடம், திராவிடநாடு என்கிற பேச்சு, கல்லூரிக்குச் செல்லும் பாதைகளில் கேட்கத்தானே செய்கிறது?," என்று யாராவது முணு முணுப்பார்களானால், அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும், எப்படிக் காற்றே வீசாதே என்று தடுக்க முடியாதோ, மழையே பெய்யாதே என்று மார்தட்டி அடக்க முடியாதோ, அது போல, புதுமைத் தாகத்தை மூடிபோட்டு வைக்க யாராலும் முடியாது. அது வளரும்! ஆனால், அந்த வளர்ச்சிக்கும் படிப்புக்கும் ஊறு ஏற்படக்கூடாது என்பதே நம் ஆசையாகும்!! அந்த ஆசை பலனளிக்கும் என்று உறுதி தந்துள்ளனர், திராவிட மாணவர்கள். வாழ்த்துகிறோம் அவர்களை! வளருங்காள், எதிர்கால ஏறுகளே! கலைபயில்கூடம் விட்டுக் கற்றுத் தெளிந்தவர்களாக வாருங்கள்! நாளைய திராவிடத்தின் நன்மைக்குத் திட்டம் தரும் சிலர்களாக, செயல் வீரர்களாக, பட்டத்தையும் படிப்பையும் பயன்படுத்தி, நம் நாடு உய்ய நல்வழி தரும் அறிஞர்களாய், விஞ்ஞானிகளாய், விற்பன்னர்களாய், விவேகிகளாய், வருக! வருக!!— என்று, மனமார வாழ்த்துகிறோம். வளர்க, அறிவு! அது வளர்ந்தால் அழியும் நிச்சயம் ஆதிக்கம்!

—[✻]—

# அந்தமான் தீவுகளில் அரிசிப்பஞ்சம்!

[ மு. குலாம்ரசூல் ]

ஏறத்தாழ நான்கு திங்களாக இத்தீவுகளில் அரிசி கிடைப்பது மிக அரிதாயுள்ளது. இத்தீவுகளில் வதியும் மக்கள் அனைவர்க்கும் குறைந்த விலையில் அரசாங்கம் அரிசி கொடுக்கப் போவதாயும்; எனவே வியாபாரிகள் சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களிலிருந்து அரிசி கொண்டுவரக் கூடாதெனக் கூறி கப்பலில் கொண்டு வருவதற்குரிய அனுமதியை மறுத்து, உத்தரவு கொடுத்துள்ளார் இத்தீவுகளின் உணவு அதிகாரி.

இதனால் பொதுமக்கள் அதிக தொல்லைகளுக்குள்ளாகின்றனர். அரசாங்கம் அரிசியை வியாபாரிகட்குக் கொடுத்துவிடுகிறது. பொது மக்கள் உணவு அதிகாரியிடம் அனுமதி பெற்று, அவரது கையொப்பத்தைக் காட்டிய பின்னரே கடைகளிலிருந்து அரிசி கிடைக்கிறது. ஆறு பேருக்கு, திங்களொன்றுக்கு நூற்றிருபது இராத்தல் அரிசி வேண்டுமெனக் கேட்டால், நாற்பது இராத்தலுக்குத்தான் உத்தரவு கிடைக்கிறது. நாற்பது இராத்தல் அரிசியை ஆறுபேர் எத்தனை நாட்களுக்கு உண்பது? கடைகளிலிருந்து இன்னும் சற்று அதிகமாக அரிசி கேட்டால், நாங்கள் எப்படியப்பா கொடுக்க முடியும்; **அரசாங்கம் கணக்கல்லவா கேட்கிறது? எனக் கூறுகின்றனர்.** அவர்கள் கூறுவது முற்றிலும் சரியே.

அரசாங்கத்தால் அளிக்கப்படும் அரிசியில் கல்லும், மண்ணும் கலந்திருப்பது மட்டுமல்லாமல் துண்டு பீடிகள், ஆணிகள் ஆகியவைகளும் நிறைந்துள்ளன. இவற்றைக் கண்டு பாட்டாளி மக்களின் மனம் கொதித்தெழுகிறது. மக்கள் எதிர்த்துக் கேட்பதற்கு வழியில்லை, இத்தீவுகளில்.

இத்தீவுகளின் தலை நகரிலிருக்கும் மக்களுக்கே இக்கதி என்றால், பல மைல்களுக்கப்பால் உள்ள சுற்றுத் தீவுகளில் வதியும் மக்களின் நிலை எப்படியிருக்கும், என்று சொல்லத் தேவையில்லை.

கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கும் அரசாங்கத்தார் தேவையுள்ள அரிசி கொடுப்பதில்லை. இதனால் தொழிலாளத் தோழர்கள் பல நாட்கள் சோறின்றிச் சப்பாத்தி மட்டும் உண்டு காலத்தைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சொந்த நாட்டிலே வாழ வழியின்றி சோற்றுக்காக இத்தீவுகளை நாடி வந்திருக்கும் தொழிலாளத் தோழர்கட்கு, இத்தீவுகளிலும் சோறு கிடைப்பது தொல்லையினும் தொல்லையாயுள்ளது.

இத்தீவுகளில் இந்திய அரசாங்கம் வங்காள, கேரள, பீகார் அகதிகளைக் குடியேற்றச் செய்து அவர்களுக்கு நிலங்கள் கொடுத்து நெல் பயிரிடச் செய்துள்ளது; அகதிகள் குடியேற்றப்பட்டு ஆண்டுகள் பலவாகிவிட்டனவாதலால், இத்தீவுகளின் சுய தேவையை இங்கேயே நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்றும், எனவே, சென்னை கல்கத்தா ஆகிய இடங்களிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய இயலாது என அரசாங்கம் செப்புகிறது.

இத்தீவுகளில் மக்கள் தொகை இப்போது நிறைந்துள்ளது என்பதும், அவர்களுக்குத் தேவையான நெல் இங்கு விளைவதில்லை என்பதும் அரசாங்கத்துக்குத் தெரிந்திருந்தும் அதனை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதில்லை. அப்படி எடுத்துச் சொன்னால், "அகதிகள் குடியேற்றப்பட்டு இத்தனை ஆண்டுகள் என்ன முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றீர்கள்?" என்று மத்திய அரசு கேட்டுவிடுமே என அஞ்சி இவர்கள் வாளா இருந்துவிடுகின்றனர். அதன் காரணமாக விளைந்த நெருக்கடிதான் இது.

அரசாங்கம் இதை நன்கு கவனித்து பொதுமக்களுக்கு வேண்டிய அரிசி கிடைக்க ஆவன செய்ய வேண்டும். இல்லையேல் அரிசித் தகராறு இத்தீவுகளில் குழப்பத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

★

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

உள்ள கோல்கொண்டாவில் மிகவும் புகழ்பெற்ற வைரங்கள் கிடைக்கின்றன; கன்னடத்திலுள்ள கோலாரில் தங்கம் கிடைக்கின்றது; கேரளத்தில் இன்னும் கிழக்கிந்தியத் தீவுகளுடன் 'மிளகு வாணிகம்' சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

*அவ்வளவு ஏன்?*

சேலத்தில் கிடைக்கும் பாக்சைட் மாதிரியை ஆராய்ந்த இத்தாலிய நாட்டு நிபுணர்கள் தந்த அறிக்கை ஒன்றில், "அங்கு கிடைக்கும் பாக்சைட் மாதிரி, அலுமினிய உற்பத்திக்குத் தேவையான—நல்ல தரமானது 20 இலட்சம் டன் பாக்சைட் அங்கு கிடைக்கும். அதைக் கொண்டு ஆண்டொன்றுக்கு 10,000 டன் அலுமினிய உற்பத்தி செய்ய இயலும்" என்று குறிப்பிட்டுள்ளனர். இச்செய்தியை அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களே கடந்த ஜூலை 23ல் தெரிவித்துள்ளார்.

*அதுமட்டுமா?*

தூத்துக்குடித் துறைமுகத்திற்கு 11 மைல் தூரத்திலுள்ள ஆத்தூரில், சென்ற ஜூலை 15-ந்திலிருந்து புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கும் "தாரங்கதரா கெமிகல் ஒர்க்ஸ்" தொழிற்சாலையில் அங்கு உற்பத்தியாகும் உப்பைக்கொண்டு நாளொன்றுக்கு 50 டன் வீதம் காஸ்டிக் சோடா தயாரிக்கப்படுகிறது. உற்பத்தியளவை அதிகரிக்கத் தீவிர நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகின்றது. இதனுல் இனி அந்நியச் செலாவணி குறையும் என நம்பப்படுகின்றது. இதற்கான புள்ளிவிவரம் ஒன்று கூறுவதாவது:—

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|---|---|
| காஸ்டிக் சோடா | 12000 | 18000 | 26000 | 35000 | 35000 |
| குளோரின் | — | 2100 | 3200 | 4300 | 5400 |
| குளோரின் பொருள்கள் | — | — | — | 2100 | 2700 |
| ஆயில் | 3900 | 5600 | 8000 | 10700 | 10700 |
| தகடுகள் | 1000 | 1400 | 2000 | 2800 | 2800 |
| இயந்திரங்கள் | 160 | 1000 | 700 | 500 | 500 |
| மொத்தம் டன்கள் | 17060 | 28100 | 39900 | 55400 | 57100 |

இதிலிருந்து 1963ம் ஆண்டில் அத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருள்களின் அளவு அல்லது அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களின் அளவு ஏறக்குறைய 4 மடங்கு அதிகரித்திருத்தலை உணரலாம். இக்குறிப்பை 'தினமலர்' 22—7—59 தேதி இதழில் வெளியிட்டுள்ளது.

வளமார் திராவிடம் நமதாக இருந்தால் இவைபோன்றவற்றுல் பெறும் வருவாயனைத்தும் நம்நிலை உயர்ந்திடப் பயன்படுமல்லவா!

அந்த நிலை இல்லாத காரணத்தால் நமது வரிப்பணம் வடவரின் நலனுக்கு வாரி வழங்கப்படுகின்றது. உழைத்துக்கொட்ட ஒரு கூட்டம்; அதை உண்டு தழைக்க ஒரு கூட்டமா? பயிர் வளர்க்க ஒரு கூட்டம்; அதை வயிறுபுடைக்க உண்ண ஒரு கூட்டமா? கனிபறிக்க ஒரு கூட்டம்; அதன் இனிமையைச் சுவைத்துச் சிரிக்க ஒரு கூட்டமா?

இதைப் புரிந்தும், புரியாத நிலையில் சிலர் பிதற்றுவதைக்காணும் போது, "எழுஞாயிற்றின் முன்னே இருட்கற்றைகள் பெறுகின்ற நிலைதான் அவர்களது கூக்குரலும்"—என்று எண்ணிடத்தோன்றுகின்றது. அப்போது நம் உதடுகளில் அலட்சியப் புன்னகை ஒன்று அரும்பி மறைகின்றது.

★

## ஆயத்தங்கள்—இருமருங்கும்!

உலக சமாதானத்தை நிலைநிறுத்திடும் பொருட்டு, வல்லரசுகளின் பிரதிநிதிகள் கூடுவதும், பேசுவதும், கலைவதும் மிகச் சாதாரண செய்திகளாக—அடிக்கடி ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன!

ஆனுல் அதிலே ஒரு புதிய கட்டம்! வருகிற செப்டம்பர் திங்களில், இரஷ்ய நாட்டுப் பிரதமர் குருஷேவ் அமெரிக்கா செல்ல இருக்கின்றனராம்! அங்ஙனம், அமெரிக்கா செல்லுவதற்குத் தன்னை ஆயத்தம் செய்துகொள்வதற்காக, அவர் அரசாங்கப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிருராம்! அப்படியென்ன ஆயத்தம் செய்கிருர் என்கிறீர்களா? சில ஆங்கிலச் சொற்களையும் சொற்ருெடர்களையும்—அமெக்கர்களுக்குப் பிடித்த, பழக்கமானவற்றை—அவர் கற்றுக்கொண்டிருக்கிருராம்!

அமெரிக்காவிலும் ஆயத்தங்கள் நடைபெறுகின்றன, குருஷேவை வரவேற்றிடும் பொருட்டு!

ஒரு முக்கியமான பிரச்சனை எழுந்திருக்கிறதாம்—அமெரிக்க அரசாங்கத்திற்கு!

விமான நிலையத்தில் குருஷேவ் வந்திறங்கும்போது 21-தடவைகள் வெடிகுண்டு முழக்கம் செய்வதா, அல்லது 19 தடவைகள் முழக்கமிட்டால் போதுமா என்பதுதான் அந்தப் பிரச்சனையாம்!

தேசத் தலைவர்களை வரவேற்க 21 தடவைகளும், அரசாங்கத்தில் தலைமைப் பீடம் வகிக்கின்றவர்களுக்கு 19 தடவைகளும் வெடி குண்டுகள் வெடித்து வரவேற்பது அமெரிக்க நாட்டு வழக்கமாம்!

இரஷ்யாவை பொறுத்த வரையில், குருஷேவ் தானே தேசத்தின் தலைவர், நாட்டின் முதல்வர், அனைத்தும்! அதனுல்தான் இந்தக் குழப்பமாம்.